# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர்: கே. எஸ். வேங்கடரமணி.


| மாலை 2 | ஞாயிறு 16-4-39 பிரமாதி௵ சித்திரை௴ 3௳ | முத்து 3 |
|---|---|---|

## பொருள் அடக்கம்

விஷயம் — பக்கம்

1. அயல் நாட்டில் இந்தியர் ... 66
2. குறிப்பு ... 68
3. தென்றல் காற்று ... 69
4. வார நடப்பு ... 71
5. பஞ்சிற்கா பயம்? (கவிதை) (ஸ்ரீ. கே. என். சுந்தரேசன் எம். ஏ.) ... 72
6. தொழில் பள்ளிக்கூடம் (ராவ்சாகேப். கே. சுப்ரமண்யம்) ... 73
7. சென்னை சுகாதாரச் சட்டம் (லெப்டினன்ட் கர்னல் ஸி. எம். கணபதி, எம். ஸி. (ஐ. எம். எஸ்) ... 75
8. தொலையாத இரவு (ஸ்ரீ. ரா. ஸ்ரீ. தேசிகன் எம். ஏ.) ... 78
9. மலர்ந்த வாழ்க்கை (ஸ்ரீ. ஆர். ஷண்முக சுந்தரம்) ... 79
10. இராக் கனவு (ஸ்ரீ. வி. ஆர். சுந்தரராமன் எம். ஏ.) ... 81
11. மீன் வயிற்று மோதிரம் (கோத்தமங்கலம் ஸ்ரீ. சுப்பிரமணியம்) ... 84
12. சிறுவர் பகுதி (ஸ்ரீ. கே. வெங்கடராமன் பி. ஏ.) ... 89
13. இந்தோ பிரிட்டிஷ் ஒப்பந்தம் ... 91
14. உலக வியாபார நிலைமை ... 94
15. இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் ... 95
16. பொருளாதார உலகம் ... 96

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# அயல் நாட்டில் இந்தியர்

சமீபத்தில் நடைபெற்ற வர்த்தக சங்கங்கள் கூட்டத்தில் அயல்நாடுகளிலுள்ள இந்தியர்கள் நலங்களை இந்திய சர்க்கார் கவனியாமல் விட்டதைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேறிற்று. அயல் நாடுகளில் லட்சக் கணக்கான இந்தியர்கள் வசித்துவருகிறார்கள். நெற்றி வேர்வை நிலத்தில் வடிய உழுது பாடுபட்டு மலைப்பாங்கான பிரதேசத்தையும் வரண்ட பூமியையும் புன் சிரிப்புச் சுழலும் வயல்களாகவும் தோட்டங்களாகவும் மாற்றியிருக்கிறார்கள். அதன் பலனை அனுபவிக்க இந்தியர்களுக்குச் சுதந்திரம் கிடையாது. வெள்ளைக்காரர்கள் இந்தியர் உழைப்பின் பலனை உறிஞ்சிக்கொண்டிருப்பதுமல்லாமல் நிறத் திமிர் பிடித்து இந்தியர்களை அவமானப் படுத்துகிறார்கள்; கொடுமைக் குள்ளாக்குகிறார்கள்.

குதிரை தூக்கிப்போட்டது மல்லாமல் குழிபறித்ததைப்போல, கென்யாவில் ஓதுக்குச் சட்டம் தலைவிரித்தாடுகிறது. இந்தியர்களின் உரிமைகளைப் பறிக்கும் இவ்விதச் சட்டங்களை எதிர்த்து நம்சகோதரர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். அவர்களுடைய பிரதிநிதியான ஸ்ரீ பாண்டியா விஷயங்களைத் தெளிவுபடுத்த இந்தியாவுக்கு வந்திருக்கிறார். எவ்வளவுதான் இந்தியர்கள் கென்யாவில் கிளர்ச்சி நடத்தியும் உபயோகமில்லை. இந்தியாவில் இந்தியருக்குச் சுயேச்சை இல்லாதபோது அயல் நாடுகளில் சுயேச்சையையோ கௌரவமான வாழ்வையோ எதிர்பார்க்க முடியுமா?

காமர்ஸ் சேம்பர்ஸ் கூட்டத்தில் இது விஷயமாகப் பேசும்போது ஸர். புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸ் வெளிநாடுகளில் இந்தியர்கள் உரிமை பாதிக்கப்படுவதற்கு இரண்டு உதாரணங்கள் கொடுத்தார். பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியர்களின் நியாயமான உரிமையைக் காக்கப் போகிறதா அல்லது பலாத்காரத்துக்குப் பயந்து சர்வாதிகாரிகளைத் திருப்தி படுத்திக்கொண்டிருக்கப் போகிறதா என்று கேட்டார்.

பர்மாவில் இந்தியர்கள் படும் பாட்டுக்கு விமோசனமே கிடையாதோ என்று தோன்றுகிறது. ஆயிரக்கணக்கில் நம்மவர்கள் தாய்நாட்டிற்குத் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்தியத் தொழிலை ஏற்கனவே கொல்லச் சதி செய்தாகிவிட்டது. இப்போது இந்தியர்களின் உயிர்களுக்கே உலைவைக்க விஷமிகள் முயன்றுகொண்டிருக்கிறார்கள். இந்தியர்-பர்மியக் கலவரம் பிரதிதினம் நடக்கும் ஓர் விஷயமாய் ஆகிவிட்டது. இந்தக் கலவரத்தை அடக்க பர்மிய சர்க்காருக்கு யோக்கியதை இல்லையானால் கவர்னர் என்ன செய்துகொண்டிருக்கிறார்?

ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தமது பிரசங்கத்தில் சொல்லியபடி நமது துர்ப்பாக்கிய சகோதரர்கள் அங்கே 80 கோடி ரூபாய் முதல் போட்டு வைத்திருக்கிறார்கள். அந்தத் தொழில்களுக்கு ஹானி விளைவிக்கக் கூடிய சட்டங்கள் தயாராகின்றன. இப்படிப்பட்ட நெருக்கடி நிகழாதபடி தடுக்கவும் இந்தியர்களைக் காப்பாற்றவும் இந்திய சர்க்கார் ஓர் சக்திவாய்ந்த ஸ்தாபனத்தை உண்டாக்க வேண்டும். ஆனால் இந்திய சர்க்கார் இத்தகைய உருப்படியான காரியத்தைச் செய்ய முன்வருமா?

அடுத்தாற்போல், ஸிலோனில் இந்தியர்கள் படும் கஷ்டங்களுக்கு அளவில்லை. அந்த இந்தியர்களில் முக்கால் வாசிப் பேர்கள் தமிழர்கள் என்பதை நினைக்கும்போது நமது வருத்தம் பன்மடங்கா

கிறது. சிங்களவரின் சுயேச்சையையோ கௌரவமான வாழ்க்கையோ கெடுக்க இந்தியர்கள் விரும்பவில்லை. ஆனால் இந்தியர்கள் உழைப்பின் நியாயமான பயனையும் தங்களுக்குரிய பங்கையும் தான் கேட்கிறார்கள். வெள்ளையர், இந்தியர்கள் உழைப்பால் செழித்து வளர்ந்து இன்றைக்கு அவர்கள் உதவி இனிமேல் வேண்டாம் என்று அறிந்து தூரத்தப் பார்க்கிறார்கள். "காரியம் ஆகுமட்டும் காலைப்பிடி அப்புறம் கழுத்தைப் பிடி" என்கிற கதை இலங்கைத் தீவிலே நடித்துக் காட்டப் படுகிறது.

இந்த மாதிரி கொடுமைகள்ஸிலோனில் நிகழுமானால் இந்தியர்கள் வெகு நாளைக்குச் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

அயல் நாட்டினர் ஏன் இந்தியர்களை இவ்வித கதிக்குள்ளாக்குகிறார்களென்று கண்டுபிடிப்பது சிரமமான கார்யமல்ல. "இந்தியா ஓர் அடிமை தேசம்; ஆகையால் அடிமைகளை எப்படி நடத்தினால் என்ன?" என்ற நினைப்பை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். இந்தியா ஜெர்மனி போன்ற சுயேச்சை நாடாயிருந்தால் இந்தியர்களுக்கு லவலேசமாவது ஹானி உண்டாகுமா? அயல் நாட்டில் நமக்கு மதிப்பு ஏற்படவேண்டுமானால் நாம் சுயேச்சையைப் பெறவேண்டும். அப்போது நமது சக்தியையும் பலத்தையும் பார்த்து இந்தியாவுடன் உலகம் சிநேகம் கொண்டாட ஆரம்பித்துவிடும்.

"இந்தியர்கள் எங்கேயிருந்தாலும் ஒருவர்தான். வித்தியாசமில்லை" என்ற 'இந்திய ஜாதி (Racialism) மனப்பான்மையை' நாம் பெறுவது தான் நமது கஷ்டங்களுக்கு மருந்தாகும். 'நெல்லிக்காய் மூட்டை' மனப்பான்மையை விட்டு, 'இந்திய ஜாதிமனப்பான்மை'யை வளர்த்தால்தான் நமது தேசத்தில் ஒற்றுமையையும், வெளி தேசத்தில் மதிப்பையும் நாம் பெறலாம்.

வெளிநாட்டில் இந்தியர்கள் படும் அவஸ்தைகள் நம் உணர்ச்சியைப் பன்மடங்கு தூண்டிவிட்டு சுயேச்சைப் போரில் எல்லாவற்றையும் தியாகம் செய்ய நம்மைத் தயார் செய்கின்றன.

---

நண்பர்கள் எழுதியனுப்பும் ஆராய்ச்சியுடன் கூடிய கட்டுரைகளும் ரஸமான கதைகளும் பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்ளப் படும்.

வாராவாரம் "பாரத மணி"யில் வெளியாகும் அனுபந்தங்களுக்கு அனுப்பப்படும் விஷயதானங்கள் புள்ளி விவரங்களுக்கு சரியானவையாகவும் தகுந்த ஆதாரத்துடனும் இருக்க வேண்டும்.

தெளிவாக காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதியனுப்பும் படி நண்பர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கடிதங்கள் தமிழில் எழுதப் பட வேண்டும். கதை கட்டுரைகள் வேறு மூலங்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டால் அதைத் தெளிவாக முன்னதாகவே தெரிவித்து விடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழரின் அறிவு வளர்ச்சிக்கான எந்த விஷயதானத்தையும் சந்தோஷத்துடன் வரவேற்கிறோம்.

குறிப்பு

# காங்கிரஸ் நிலை

திரிபுரி காங்கிரஸ் முடிந்து ஒரு மாதம் ஆகிறது; ஆனால் அதன் தீர்மானப்படி காரியக் கமிட்டியோ பார்லிமெண்டரி சப் கமிட்டியோ நியமனம் ஆகவில்லை. ஏதோ வொரு தீராத நோய் ஸ்ரீ போஸைப் பிடித்துக் கொண்டு ஆட்டுகிறது. இவ்வளவு நாளாகியும் அவர் வியாதி குணமாகவில்லை என்பதைக் குறித்து மிகவும் வருத்தப் படுகிறோம்.

ஆனால் ஒரு தனி மனிதனின் அசௌகரியத்தால் நாட்டின் நடவடிக்கைகள் ஒரே அடியாக நின்று போய் விடுவது என்பது மிகவும் பிசகு. ஸ்ரீ போஸ் உடம்பு குணமாகவில்லையென்றால் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உடனே கூடி தற்காலிகமாக வேறொருவரை நியமித்துக் காரியம் நடத்த வேண்டும். ஸ்ரீ போஸே இதற்குப் பிரயத்தனம் செய்திருக்க வேண்டியது. அவர் செய்யத் தவறி விட்டார்.

பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளும் அறிக்கைகளும் எழுதும் பலத்தையும் காலத்தையும் காங்கிரஸ் நடவடிக்கைகள் விஷயத்தில் ஸ்ரீ போஸ் செலுத்தி யிருந்தால் மிகவும் நலமாயிருந்திருக்கும். அதை விட்டுவிட்டு காங்கிரஸ் செய்த தீர்மானம் பிசகென்று நடந்து போனதை யெல்லாம் கிளறிக் கொண்டு இருப்பது ஸ்ரீ போஸுக்கு அழகல்ல.

27-ம் தேதி காரியக் கமிட்டியும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் கூடப் போவதாகச் செய்தி கூறுகிறது. ஆனால் விஷயங்கள் எல்லாம் மூடு மந்திரமாக இருக்கின்றன. என்ன நடைபெறப் போகிறது என்று தெரியவில்லை.

## இந்தியா சட்டச் சீர்திருத்தம்

இந்தியா சட்டத்திற்கு பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்டிருக்கும் சீர்திருத்த மசோதாவில் 126-ஏ ஷரத்து மாகாண சர்க்கார்களின் அதிகாரத்தை பாதிக்கும்படியாக அமைக்கப் பட்டிருக்கிறது. யுத்த நெருக்கடி சமயங்களில் சமஷ்டி சர்க்கார் மாகாண சர்க்கார்களில் தலையிட்டு, தேவையான உத்தரவுகள் போடலாம் என்பதுதான் அதன் கருத்து.

யுத்தம் வந்தால் காங்கிரஸ் பிரிட்டனுடன் ஒத்துழைக்க முடியாது என்று காங்கிரஸ் தலைவர்கள் சொல்லிக் கொண்டிருப்பதைக் கண்டு பிரிட்டிஷ் சர்க்கார் பயந்து நெருக்கடியில் காங்கிரஸ் சர்க்கார்கள் ஏதாவது குளறி விட்டால் என்ன செய்கிறதென்று முன் ஜாக்கிரதையாக இந்த மாதிரி சீர்திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

காங்கிரஸ் என்றும் தர்ம யுத்தத்திற்கு ஒத்தாசை செய்யத் தயங்காது. யுத்தம் என்பதற்காகவே பயந்து பின் வாங்கி விடாது. அல்லது கண்மூடித் தனமாக தனது பொறுப்பையும் தட்டிக் கழிக்காது. சமயத்தை அனுசரித்து சத்தியத்திற்கேற்ற முறையில் நடந்து கொள்ளும். சென்ற யுத்தத்தில் காந்திஜியே ஆள்திரட்ட உதவி செய்ய வில்லையா?

எனவே பிரிட்டிஷ் சர்க்கார் இந்த நிலைமையில் காங்கிரஸின் பொறுப்பு மனப்பான்மையில் நம்பிக்கையின்றி தன்னலத்தையே பிரதானமாகக் கொண்டு இந்த மாதிரிச் சீர்திருத்தம் கொண்டு வந்திருப்பது நேர்மைக்கு அழகல்ல. அதுவும் இந்த நிலைமையில் அந்த மாதிரிச் செய்வது பிரிட்டிஷ் மனப்பான்மையில் நமக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதாகவும் இல்லை. இதனாலேயே காங்கிரஸ் சர்க்கார்களைக் கீழ்ப்படியும்படி செய்து விடலாம் என்று பிரிட்டிஷ் சர்க்கார் எண்ணினாலும் தவறு. இன்று சட்டம் செய்து விட்டால் என்ன? இன்று காங்கிரஸ் சர்க்கார்கள் ஆட்சேபிக்காமல்கூட இருந்து விடலாம். ஆனால் அந்த ஷரத்து அமுலுக்கு வரும்போது தான் இருக்கிறது நெருக்கடி.

## இன்னும் என்ன?

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அவசரமாகக் கூடுவதற்குத் தேவையான வெளிக் காரணங்கள் இல்லை; ஆனால் மர்மமாக ஏதோ பெருத்த நிகழ்ச்சிகள் நடப்பதால் தான் விபரீதமான நடவடிக்கைகள் எல்லாம் பிரிட்டனில் நடக்கின்றன. மத்தியதரைக்கடலில் என்ன ஆபத்தோ யார் கண்டார்கள்? பிராங்கோ பரிபூர்ண வெற்றியடைந்த பிறகு முஸோலினி அல்பேனியாவைத் தாக்கியிருக்கிறார் என்பது கவனிக்கத் தக்கது. ஜிப்ரால்டர் சாமாசாரமோ? மால்டாவில் முஸ்திபுகள் தடபுடலாக இருக்கின்றனவாம். பிரிட்டிஷ் கப்பற்படை பிரயாணங்களும் இருக்கின்றன.

# தென்றல் காற்று

சேம்பர்லேன் லண்டனிலிருந்து செக்கர்ஸ் என்ற இடத்துக்குப்போய் மீன் பிடித்தார். 'காக்காய் பிடித்து' அலுத்துப்போய்விட்டதால் ஒரு "மாறுதலுக்காக" மீன் பிடிக்கிறார் என்பது ஸர் ஆர்ச்சிபால்ட் ஸின்கிளேர் அபிப்பிராயமாக இருக்கவேண்டும்.

* * *

ஏகாதிபத்யக் கொள்கையைப்பற்றி பிரிட்டன் ஓர் பள்ளிக்கூடம் வைத்து சர்வாதிகாரிகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் இதாலிக்கு இந்த விஷயத்தில் ஞானம் இருக்கிறது. அல்பேனியாவை இதாலி ஏன் கபளீகரம் செய்தது என்பதற்கு ஒரு இதாலியப் பத்திரிகை சமாதானம் சொல்லுகிறது. அதாவது அல்பானிய மக்கள் தங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று இதாலியைக் கெஞ்சிக் கூப்பிட்டார்களாம். அதற்காகத்தான் இதாலி அல்பானிய மக்களுக்கு உதவிசெய்து, அரசரை விரட்டி அடித்ததாம்.

* * *

சண்டா சாகேப் வெற்றிலைப்பாக்கு வைத்து அழைத்ததால்தானே கிளைவ் திருச்சினாப்பள்ளியைப் பிடித்துக்கொண்டார்? இவர்கள் கூப்பிடாவிட்டால் ஆங்கிலேயர்கள் கம்மென்று இருந்திருக்கமாட்டார்களா எல்லாவற்றையும் பிரஞ்சுக்காரர்கள் வசம் விட்டுவிட்டு?

* * *

டல்ஹௌஸிபிரபு காலத்தில் சமஸ்தானப் பிரஜைகள் "ஐயோ! வாருங்கள். இந்த ராஜாவைத் துரத்திவிட்டு நீங்கள் எங்களை ஆளுங்களேன்!" என்று கேட்டுக் கொண்டார்கள். அதனால்தான் டல்ஹௌஸி பிரபு வேண்டாவெறுப்பாக சமஸ்தானங்களைப் பைக்குள் போட்டுக் கொண்டார். காலாவதிக் கொள்கைக்கு (Doctrine of Lapse) காரணம் சமஸ்தானப் பிரஜைகளின்பேரில் அந்த வைஸ்ராய் பிரபுக்கு இருந்த கருணைதான். வேறு ஒன்றும் இல்லை.

மகாஜனங்கள் காலில் வந்து விழுந்து கெஞ்சிக் கேட்டாலொழிய ஆங்கிலேயர் ராஜ்யத்தைச் சேர்த்துக் கொள்வதில்லை. அதுமாதிரியே அல்பேனியமக்கள் காலில் விழுந்து உதவி செய்யும்படி கேட்டுக் கொள்ளாவிட்டால் இதாலி உதவிசெய்ய ஆரம்பித்திராது.

* * *

இதாலிக்கு ஏகாதிபத்ய முறையில் போதனை வேண்டிய அவசியமில்லாவிட்டால்கூட சேம்பர்லேன் இதாலியில் ஓர் ஏகாதிபத்யப் பள்ளிக்கூடம் ஏற்படுத்த வேண்டும். அதற்கு லார்ட் வில்லிங்டன் பிரின்ஸிபாலாக இருப்பார். ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் 'டிரில் மாஸ்டராக' இருப்பார்.

* * *

தர்பார் வீரவாலா சில முஸல்மான்களோடு விஷமம் செய்வதற்காகப் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பெடரல் நீதிபதி அளித்த தீர்ப்பு வெற்றிகரமாக நிறைவேறாமலிருக்க சூழ்ச்சிகள் செய்து வருகிறாராம். இவை நடைபெறாமல் இருக்க வேண்டுமானால் ஸர் பன்னீர்செல்வத்தை ராஜ்கோட்டுக்கு அனுப்பிவைக்க வேண்டும். வீரவாலாவை திருவாங்கூருக்கு அனுப்பி ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் இதாலி ஏகாதிபத்யக் கலாசாலைக்குப் போகும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

* * *

சென்னை கவர்னராக வரப்போகிறவர் பிரபல கிரிக்கட் ஆட்டக்காரர் என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை சந்தோஷப் படுகிறது. இனிமேல் கிரிக்கட் அபிமானிகள் கவலையில்லாமல் தூங்கலாம். ஏனென்றால் கிரிக்கட்டைப்பற்றிய கவலைகளை வரப் போகும் கவர்னர் ஏற்றுக் கொள்ளுவார்.

* * *

சென்னை மந்திரி சபையில் உள்ள பத்துப்பேரையும்சேர்த்துக் கொண்டால் கவர்னர் ஒரு 'பக்கா' டீமை தயார் செய்யலாம்.

ஆனல் காப்டனுக இருக்க டாக்டர் சுப்பராயன் அனுபவஸ்தரானதால் ஆசைப்பட்டால்கூட ராஜாஜி தான் கடைசியில் காப்டனுக ஆவார். அப்போது எந்த மந்திரிக்கு எந்த இடம் கொடுக்க வேண்டுமென்று நிச்சயிக்க வேண்டு மல்லவா?

* * *

ராஜாஜியும் பிரகாசமும் 'ஸ்லோ' பௌலர்களாக இருப்பார்கள். அதற்காக ராஜாஜியை லகுப்பட்டவர் என்று நினைக்கக் கூடாது. அவர் 'ஹூக்ளி' போலராதலால் ஒரு ஓவரில் 10 விக்டையும் எடுத்து விடுவார். 'பாஸ்ட் பௌலராக' டாக்டர் சுப்பருயனும் கோபால ரெட்டியும் இருப்பார்கள். ஓடியாடி 'பீல்ட்' பண்ண ஸ்ரீ யாகுப் ஹாஸனே அனுப்பக் கூடாது. 'ஸிலிப்பில்' போட்டுக் கொள்ளலாம். டாக்டர் ராஜனை விக்கட் கீப்பராகப் போடலாம். இதுமாதிரி ஒரு கோஷ்டியை கவர்னர் தயார் பண்ணி விடலாம்என்பது என் அபிப்ராயம்.

* * *

ஆனல் ராஜாஜியே போல் பண்ணுவார், பாட் பண்ணுவார், அதே சமயத்தில் விக்கட் கீப் பண்ணுவார், பீல்ட் பண்ணுவார்; வேறு ஒருவருக்கும் விளையாட்டில் இடம்இல்லே என்று ஒருவர் சொல்லுகிருர். இப்படிப்பட்ட அஷ்டாவதானம் 'கிரிக்கட்டில்' முடியாதாகையால் அவர் சொல்வதை நான் ஒப்புக் கொள்ளவில்லே.

* * *

சுபாஷ் சந்திரபோஸ் காங்கிரஸ்காரர்கள் சமூக விருந்துகளில் கலந்து கொள்ளக்கூடாது என்று கட்டளையிட்டார். இனிமேல் தாங்கள் செய்யும் காரியங்கள் வெளியே வாராமலிருக்க சில காங்கிரஸ்காரர்கள் தீவிர யோசனே செய்வதாகத் தெரிகிறது. இனிமேல் டின்னர்களுக்குப் போகும்போது தகுந்த ஜாக்கிரதை எடுத்துக்கொள்வார்கள். முகமூடி அணிந்தோ அல்லது முட்டாக்குப் போட்டுக்கொண்டோ போய்விட்டு வரலாம். அல்லது மாறுவேஷம் தரித்து திருட்டுத்தனமாகப் போய்விட்டு வரலாம். அப்போது இந்த விஷயம் சுபாஷ்போஸுக்குத்தான் தெரியுமா? அவரைப் படைத்த பிரம்மாவுக்குத்தான் தெரியுமா?

* * *

டாக்டர் ஜெகில் மிஸ்டர் ஹைடாக உருமாறி வேலே செய்தார். அதுமாதிரி ஸ்ரீமான் கா. இரவில் உருமாறி சர்க்கார் தாசராக ஆகிறுர். அவ்வளவுதான் அதில் தவறு ஒன்றுமில்லே. ஆனல் இப்போது டாக்டர் ஜெகில் உயிரோடுதான் இருக்கிறுர். சாஸ்திரப் பரிசிலனே இப்போது தானே ஆரம்பமாகியிருக்கிறது?

* * *

மார்க்காயம் சந்தர்ப்பத்தினுல் திருடனுனன். அதுமாதிரி ஒருவர் சர்க்கார் தாசராக ஆனுல் அது சந்தர்ப்பத்தை ஒட்டினதாகத்தான் இருக்கவேண்டும். வேறு ஒன்றும் இல்லே. மார்க்காயம் தர்மதேவதை வந்து முன்னுல் நின்றபோது பதறினுன்; மன்னிப்புக் கேட்டான். 'நமது மிஸ்டர் ஜெகில்' என்னசெய்கிறுரென்ருல் சட்டத்தை நடத்தி சட்டத்தை உடைப்பதாகச் சொல்லுகிருர். ஆகவே இரண்டு பேர்களுக்கும் வித்தியாசம் இருப்பதால் இரண்டு பேருக்கும் சம்பந்தம் கிடையாது!

* * *

'கேஸ் ஆபிரா' என்ற நாடகத்தில் மல்வோலியோ என்ற உல்லாசத் திருடன் வருகிறுன். அவனுக்கு இரண்டு மனைவிகள். இரண்டு பேர்களேயும் அவன் திருப்தி செய்யப்பார்க்கிறுன், கடைசியில்?... அரசியலுக்கும் நாடகத்துக்கும் சம்பந்தம் இருக்கிறது. அரசியலே ஒரு நாடகம் தானே?

# வார நடப்பு

காந்திஜி ராஜ்கோட் வந்து சேர்ந்தார். ஸர்தார் படேலும் ராஜ்கோட்டுக்கு வந்துவிட்டார். சீர்திருத்தக் கமிட்டி அமைப்பு பற்றி தான் அவ்விருவர்களும் அங்கு சென்றிருப்பதாகத் தெரிகிறது. காந்திஜி ஒரு மாதகாலம் (சீர்திருத்தக் கமிட்டி அமைத்து ஸமஸ்தானத்தில் பொறுப்பாட்சி ஆரம்பிக்கும்வரையில்) அங்கு தங்கப் போவதாகச் செய்தி கூறுகிறது. காந்திஜியுடன் கலந்துகொண்டு சீர்திருத்தக் கமிட்டி அமைப்புக்கு எழு நபர்களின் பெயர்களை தாகூர் ஸாகிபுக்கு, படேல் சிபார்சு செய்வார்.

ராஜ்கோட்டிலிருந்து கடைசியாக வந்த செய்திகளைப் பார்த்தால் வீரவாலாவின் கபட நாடகத்தால் சிக்கல் வந்துவிட்டது என்று அறிகிறோம். இந்த பிரகிருதியை ராஜ்கோட்டில் விட்டுவைத்திருக்கும் வரையில் குழப்பம்தான்.

காந்திஜியின் அபிப்பிராயத்தை அறிந்து அதற்கு அனுகுணமாக அமைக்கப்படும் புதிய காரியக் கமிட்டி எப்ரல் 27-ம் தேதியிலும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அதற்கடுத்த நாட்களிலும் கூடப் போவதாக ஸ்ரீ போஸ் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்.

லண்டன் லார்ட்ஸ் சபையில் 1939-ம் வருஷத்திய இந்திய கவர்ன்மெண்ட் சட்டத்திற்கு சீர்திருத்த மசோதா ஒன்று கொண்டு வரப்பட்டது. அச் சீர்திருத்தப்படி மாகாண சர்க்கார்களின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன. இந்தச் சீர்திருத்தம் யுத்த நெருக்கடி காலத்தில் பிரிட்டிஷாருக்கு மிகுந்த உதவியளிக்கும்.

ஸ்ரீ ஜவஹர்லால் தலைமையில் கூடிய மத்திய மாகாண காங்கிரஸ் கமிட்டியின் கவுன்ஸில், யுத்த காலங்களில் மாகாண சர்க்கார்களின் சக்தியைக் குறைக்கும் இந்திய கவர்ன்மெண்ட் சட்டத்தின் சீர்திருத்த மசோதாவைக் கண்டித்தது. மாகாண சர்க்கார்கள் எவ்விதமான தடங்கலையும் வென்று காங்கிரஸின் திட்டப்படி நடப்பார்கள் என்று அது நம்புகிறது.

லக்ஷ்மணபுரியில் நடந்த அகில இந்திய நிலச் சுவான்தாரர்கள் மகாநாடு மாகாண சர்க்கார்களுடனும் காங்கிரஸுடனும் ஆலோசித்து ஜமீன்தார்களுக்கு நலனளிக்கும் பல சட்டங்களைக் கொண்டுவருவதற்காக ஒரு கமிட்டியை அமைத்தது.

ஐரோப்பிய நெருக்கடி வரவர வலுத்துக் கொண்டு வருகிறது. ஸர்வாதிகாரிகளின் ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு சேம்பர்லின் வெகு தீவிரமாக வேலை செய்துகொண்டிருக்கும்பொழுது முஸோலினி அல்பேனியாவைச் சேர்த்துக்கொண்டுவிட்டார். அல்பேனியாவில் ஒரு பிணமி சர்க்காரும் ஏற்படுத்தியாய்விட்டது. அபிஸீனியாவைத் தொலைக்க என்ன காரணம் கூறினரோ அதேதான் அல்பேனியாவின் நாசத்துக்கும்.

இத்தாலியின் இந்த ஆக்கிரமிப்பு ஹிட்லருடன் கலந்தாலோசித்த பிறகுதான் தொடங்கியது என்று தெரிகிறது. ஹிட்லர் இதற்கு உடந்தையாக இருக்கிறார்.

அல்பேனியாவின் வீழ்ச்சியால் யுகோஸ்லேவியா தடுமாற்றமடைந்திருக்கிறது. ஜனநாயகங்கள் எல்லாம் இந்த ஹிட்லர்-முஸோலினி ஆக்கிரமிப்புகளைக் கண்டித்துக்கொண்டிருக்கிறார்கள். இத்தாலியின் நடவடிக்கைப் பற்றி பிரிட்டிஷ் சர்க்கார் ஒருவிதமான தீர்மானத்திற்கும் வரவில்லை. சென்ற செப்டம்பரில் செய்துகொண்ட ஆங்கிலோ—இத்தாலிய ஒப்பந்தம் சிதறிவிடுமோ என்ற பயத்தை இங்கிலாந்தில் சிலர் கொண்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தம் சிதறினாலும் பரவாயில்லை என்று தன் வேலையைப் பார்க்கிறார் முஸோலினி.

போலந்துடன் செய்துகொண்ட ஒப்பந்தம் தவிர வேறு ஒன்றும் பிரிட்டிஷ் சர்க்கார் செய்ததாகத் தெரியவில்லை.

எப்ரல் 20-ம் தேதி ஹிட்லர் பிறந்த தினக் கொண்டாட்டமாம். அன்று தன் திட்டத்தை அவர் வெளியிடுவாராம். அத்திட்டத்தின்படி பால்கன் தீபகற்பம் அவர் ஆதிக்கத்துக்குள்ளாகிவிடுமோ என்ற பயம் சிலருக்கு இருந்து வருகிறது.

# *பஞ்சிற்கா பயம்?

(ஸ்ரீ கே. என். சுந்தரேசன், எம். ஏ.)

பஞ்சை எறிந்ததேனோ? - விளையாடுகையில்
பாப்பா துறந்ததேனோ?

கொஞ்சும் வாயினிலிட் டெதனையும் களித்தனை
அஞ்சியின்று கரம்வீசிச் சுளித்தனை
பஞ்சை எறிந்ததேனோ?

சித்தருரு நிறப்பதாலோ? - சுவைப்பின்
திருஎச்சில் வறப்பதாலோ?

தொத்துணர்வு மறப்பதாலோ? - உருண்டு
சுழல்வதன்றிப் பறப்பதாலோ?

ரத்தநீரும், வைத்யசாலை மருந்துநீரும்
இதனைடொட்டும் பயமோ?

குத்துவிளக் கெரிவதற்குத் திரியிஃதே,
கொளுத்துமென்ற பயமோ?

எத்துசெய்து மேகமுன்னைக் கொடுபோக
இழிந்ததென்ற பயமோ?

மெத்தையுள்ளும் அணையினுள்ளும் ஒளிந்துறக்கும்
விஷமிதென்ற பயமோ? - தூய

வெண்மையோ? - அமுத்த மெலியும்
தண்மையோ? - இழுக்க நீளும்

வண்மையோ? - கொழுவுக்குலையாத்
திண்மையோ? - அழுங்கி எதற்கு,

விடுத்துப் பறக்கவிட்டு விலங்கிக் குறுகுகிறாய்?
பிடித்து நொறுக்கொணாமல், கலங்கி மறுகுகிறாய்?

---

*கோலிஅளவுப் பஞ்சுருண்டையொன்று பதினொன்று மாதக் குழந்தை கையில் சிக்கியபோது, அது, எறிந்தும் எடுத்தும் குறுகியும் விலகியும் நடந்தவிதத்தை வியந்து, "என் பள்ளிகொண்டீரையா" மெட்டில் பாடியது.

பதினோருமாதக் குழந்தை சாதாரணமாய் விளையாட்டே விருப்பாய், தூங்குவதற்குப் படுத்துவதைக் குறிக்கிறது, "உறக்கும் விஷம்" என்ற அடை.

# தொழில் பள்ளிக்கூடம்

(ராவ் சாகேப் கே. சுப்ரமண்யம்)

"நம்ம ஊர்களில் எத்தனை குடும்பங்கள் ஸிவில் கோர்ட்டிலேயும் கிரிமினில் கோர்ட்டிலேயுமாகத் தொலைந்தது தெரியுமா? நீயே பார்த்துக் கொண்டிருக்கிறாயே? நிறைய ஸிவில் கோர்ட்டுகள் ஏற்பாடு ஆயிற்று. ஊர்களெல்லாம் குட்டிச்சுவர் ஆகிவிட்டன. அது வந்த வேலைகள் தீர்ந்தன. ஒண்ணு ஏண்ணுப் போய்க் கொண்டிருக்காப்போல இருக்கிறது. கொஞ்சமான செலவா? கொஞ்ச கஷ்டமா? கொஞ்சக் கவலையா?"

"அதினாலே கோர்ட்டுக்குப் போகப்படாது என்கிறீர்கள். பின்னே தகராறுகள் வந்தால் என்னபண்ணுகிறது?"

"ஊரில் பெரிய மனுஷர்களாய் தெய்வத்துக்குப் பயந்து சத்தியமாய் நடக்கிறவர்கள் இல்லவேயில்லையா? அவர்களுக்குக் காசு இருக்காது. அநேகமாக ஏழையாகத்தானிருப்பார்கள். லட்சுமியும் ஸரஸ்வதியும், வித்தையும் செல்வமும், அநேகமாக கூடியிருக்கிற வழக்கமில்லையல்லவா இந்தக்காலத்திலே? இங்கிலீஷில் கூட யாரோ சொன்னாராம்: தற்காலத்திலே 'யோக்கியமாயிருந்தால் லாபமில்லை; நல்ல குணம் ஜயிப்பதில்லை'. அக்கிரமக்காரன்களுக்குத்தான் இது காலம் என்று நாம் கூடச்சொல்லவில்லையா? நல்ல யோக்கியதையும். சத்தியமும் தவறாத மனுஷர்கள் யோக்கியஸ்தர்களையும் ஸத்தியஸந்தர்களையும் வேண்டும்போது மத்தியஸ்தம் செய்யும்படி கேட்டுக்கொண்டால் நியாயம் நடக்காதா? நிஜ நியாயம் இங்கே தாண்டா. கோர்ட்டிலே நியாயம் சாக்ஷிகள் மேலே நிற்கிறது. காசுள்ளவன் பக்கத்திலேதான் அநேகமாக சாக்ஷிகளும் சாமர்த்திய வக்கீல்களும். இங்கே உள்ளூரிலே அந்தமாதிரி நடக்குமா?"

"நடக்காதுதான். ஆனால் ஊரிலே இதை ஒத்துக்கொள்ளவேணுமே இரண்டு பக்கத்துக்காரர்களும்."

"அடே! நாம் எல்லோரும் இப்போது இருக்கிற ஸ்திதியை நன்றாக அறிந்து கொண்டால் ஏன் வீண் செலவு செய்யக் கோர்ட்டுக்குப் போகிறோம்? கொஞ்சநஞ்சமா இந்த கோர்ட்டுகள் தின்றன? எத்தனை குடும்பங்கள் அடியோடு போய்விட்டன? 10 ரூபாய் பெறுமானமுள்ள ஒரு வியாஜ்ஜியத்துக்கு மனக்கட்டுக்கு நூறு ரூபாய் செலவு இரண்டு கக்ஷியிலும். ஊரைவிட்டு மொத்தத்திலே எவ்வளவு பணம் வெளியே போச்சு? ஆகையால் இந்த கோர்ட்டுக்குப் போகிறதை மறந்துவிட்டால் காசு செலவில்லாமல் சத்தியநியாயம் கிடைக்கும். இந்த கிராம மத்யஸ்தத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேணும். அதற்குக் கீழ்படிந்து நடக்கவேணும்."

"ரொம்ப நல்லதுதான்! ஆனால் இப்போ கோர்ட்டு உத்திரவுகளுக்கே டிமிக்கி கொடுக்கிற வழியாயிருக்கிறதே! ஒரு கேஸ் தீர்மானமாகக் கிட்டத்தட்ட ஒரு ஆயுள் காலம் கூடப் போதாதே; அப்போது எப்படி நடக்கும்?"

"ஊர் நியாயத்துக்குக்கட்டுப்படாதவன் ஊரில் இருக்கிறதற்குக் கூட அவனே மிக்க மனக்கஷ்டமும், வெட்கமும் கேவலமும் படமாட்டானா? யாரும் அவ்வளவு மோசமாய் போய் விடமாட்டார்கள் இந்த தர்ம நாட்டிலே?"

"பார்க்கவேணும். அப்புறம் இன்னும் என்ன செலவைக்குறைக்கலாம்?"

"இந்தக்காலத்துப் படிப்பு. பிள்ளைகளை இங்கிலீஷ் வாசிக்கவைக்கிறார்கள். பி. ஏ., எம். ஏ. எல்லாம் படித்து கலெக்டர், ஜட்ஜி, கவர்னர் வேலை ஆகப்போகிறது என்று இருக்கிறதை விற்று விட்டுக் குடி மூழுகிப் போனது எத்தனை குடும்பங்கள்? நம்ம ஊரிலேயே பார்க்கலாமே. பணக்காரனாயிருக்கிறவன் அப்படிப் படிக்க வைக்கட்டும். நமக்கு அவ்வளவு செலவு செய்து படிக்கவைக்கமுடியுமோ? அவனும் பின்

னாலே வேலையகப்படாமல் திண்டாடுகிறதைச் சொல்லட்டுமா? இருக்கிற காசைப் போக்கடித்துவிட்டு அவன் நொந்து கொள்வதைச் சொல்லட்டுமா? அந்தப் படிப்புதான் பின்னாலே நமக்கு உபயோகப்படுகிறதா? ஏதோ கொஞ்சம்பேர் நல்ல உத்தியோகத்துக்கு வந்து விட்டார்களென்றால் எல்லோருக்கும் அந்த மாதிரி கிடைக்குமா? அதிர்ஷ்டம்கூட ஒன்று இருக்குடா. அது எல்லாருக்கும் அடிக்காது. பழையகாலத்திலே ஊரில் வாத்தியார்கள் நம்பகிட்டே இருந்துகாலக்ஷேபத்துக்கு வாங்கிக்கொண்டு, நமக்கு அநுகூலமாய் மனம் கோணாதபடி ரொம்பச் செலவில்லாமல் தெய்வபக்தியோடு குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது இருக்கிற விதம் தான் தெரிகிறதே. 10 கலம் வருகிற வயலிலே 15 கலம் வரும்படியாக செய்கிற படிப்பல்லவோ நமக்குவேண்டும்? மாட்டுக்கு மனுஷனுக்கு ஏதாவது சின்ன வியாதி வந்தால் சுலபமாக ஊர்ப்பச்சிலையைக்கொண்டு குணப்படுத்துகிறதுதான் வேண்டும். அதில்லாமல் உத்தரசமுத்திரத்திலே திமிங்கிலவேட்டை ஆடுகிறது நமக்கு எதற்கு? இந்தப்படிப்பு கற்றுக்கொடுக்க அவர்களுக்கு சம்பளம் போதவில்லை என்று கூட கூப்பாடு போடுகிறார்களாம்! அவர்கள் மேலேயும் குற்றம் சொல்வதற்கில்லை. அவர்களுக்குக் கற்று கொடுக்கிற விதம் அபாயமாயிருக்கிறது. பாவம்! என்ன தேசசரித்திரம் பூகோள சாஸ்திரமென்று சொல்லிக்கொடுக்கிறார்கள்? நமக்கு அநுகூலமாயிருக்கிற முறையில் இல்லை என்கிறதுதான் என் அபிப்பிராயம். தேச சரித்திரமோ இன்னும் மோசம். நம் பூர்வஸ்திதியைத் தெரிவிக்கிறதில்லை. எப்படி இருந்து இந்த நிலைமைக்கு வந்தோம் என்கிறதெல்லாம் இல்லை. மொத்தத்திலே இப்போது இருக்கிற பள்ளிக்கூடங்கள் நமக்கு வேண்டியபடியில்லை. ஆகையால் அவற்றை மாற்றிப்போடவேண்டும். நிழலைப்பார்த்து நாழிகை மணி சொல்லத்தெரியாத வாத்தியார்கள் நமக்கு வேண்டாம். நக்ஷத்திரம் பார்த்து பொழுது சொல்லத் தெரியுமா அவர்களுக்கு? "மணிபார்க்க கடியாரம் வாங்கிக்கொள். திக்குத்திசைக்கு கம்பாஸ் வைத்துக்கொள்)" என்பார்கள். பெரிய பெரிய பேருள்ள புஸ்தகங்களின் அசல் உபயோகம் சந்தேகம்தான். என்னமோ போ. ரொம்ப அவஸ்தையாயிருக்கிறது. இதையெல்லாம் நினைத்தால் பையன்களுக்கு விளையாட்டுகள் கூட மேல்நாட்டு விளையாட்டு. அநியாயச்செலவு. தெரியாமலே நாம் எல்லாரும் வலையிலே விழுந்தாச்சு. விடுவித்துக் கொள்ளும் வழியைப் பார்க்கவேணும் இந்த பள்ளிக் கூடமாயையிலிருந்து. சர்டிபிகேட் இல்லாமல் போனாலும் போகிறது!"

"அதற்குத்தான் இப்போது இந்த படிப்பையெல்லாம் மாற்றப் போகிறதாகச் சொல்லுகிறார்கள். சர்க்காருக்கும் நன்றாகத் தெரிஞ்சுபோய் விட்டதே."

"ரொம்பசரி. சர்க்கார் மாற்றுகிறதானால் சீக்கிரத்திலே முடியப்போகிறதா? அடேயப்பா! இன்னும் எத்தனை மீட்டிங்குகளோ? அபிப்பிராயங்களோ? எத்தனை திட்டங்களோ? மாற்றவேண்டும், மாற்றவேண்டாம், என்கிற கக்ஷிவம்புகள்! இதெல்லாம் எத்தனையோ இருக்கின்றன. ஊர்கூடி செக்குத்தள்ளவேணும். சட்டு புட்டென்று செய்கிற காரியமாயிருக்காது. ஒன்று இரண்டு தலைமுறை ஆகிவிடும் என்று தோன்றுகிறது. அதற்காக நாம் காத்துக்கொண்டிருக்க வேண்டாம். நாமே ஏற்பாடு செய்து கொள்ளுவோமே. வார்தா திட்டம் நன்றாயிருக்கிறது. அதை நாமே ஆரம்பிக்கலாம். சர்க்காரில் ஆரம்பிக்கவேண்டுமென்றாலும் டிஸ்டிரிக்ட் போர்ட்டிலே செய்கிறதாயிருந்தாலும் அதற்கு இனிமேல் டிரெயினிங் ஸ்கூல் வைக்கவேணும்; அதிலே வாத்தியார்கள் படித்து பாஸ் பண்ணவேணும்; அதற்கு முன்னாலேயே இன்ஸ்பெக்டர்கள் தயாராகவேணும்; அந்த வாத்தியார்கள் செய்யும் வேலையை இன்ஸ்பெக்ஷன் செய்ய முக்கியமான ஊர்கள் எது என்று யோசனை பண்ணவேணும் அதிலே அந்த ஸ்கூல்கள் ஏற்படுத்த! இதெல்லாம் நடக்க ஒரு ஜென்மமாவது ஆகிவிடும் போலிருக்கிறது."

# சென்னை சுகாதாரச் சட்டம்

(லெப்டினல் கர்னல் ஸி. எம். கணபதி எம். ஸி. (ஐ. எம். எஸ்.)

'சுகாதாரம்' என்ற வார்த்தைக்கு 'சிக்கு இல்லாமல் இருப்பது'' என்று அர்த்தம் என்று பலர் நினைக்கிறார்கள். இது அர்த்த மல்ல. ஆஸ்பத்திரிக்குப் போகாமல் இருந்து விட்டால் ஆரோக்கிய மாக இருப்பதாக அர்த்தமா? இல்லவே இல்லை. சுகாதாரம் என்பதன் உண்மை யான தாத்பர்யம் வேறு. உடம்பிலுள்ள எல்லா அங்கங்களும் அதனதன் வேலையைச் சரியாகச் செய்து, அதனால் உடம்பும் மன மும் சுறுசுறுப்பான நிலையில் இருப்பது தான் சுகாதார நிலையாகும். சுகாதாரமாக இருக்க வேண்டு மென்றால் நாம் வியாதி இல்லாமல் இருக்க மட்டும் பார்த்துக் கொண்டால் போதாது. உடம்பு ஆரோக்கி யமாக இருந்து, உடம்பும் மனமும் சரியாக வேலை செய்து, அதனால் வாழ்க்கையை அனுபவித்து, தனக்கும் பிறருக்கும் உப யோகமான வாழ்க்கையைக் கடைப்பிடிப்ப துதான் ஒருவன் லட்சியமாக இருக்க வேண்டும்.

ஒரு மனிதனின் ஆரோக்கியத்தில் அவன் மட்டுமின்றி சமூகமே சிரத்தை கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் ஒரு சங்கிலியின் பலம் அதிலுள்ள பலவீன மான கரணையின் பலம்தான். துரதிருஷ்ட வசமாய் தனிப்பட்ட நபர்களின் சுகாதாரத் தில் நாம் மிகவும் மோசமான அலட்சியத் தைக் காட்டி வருகிறோம். ஆரோக்கியமும் வியாதியும் தற் செயலாக ஏற்படும் விஷ யங்களென்று எண்ணி விடுகிறோம். ஒரு மனிதர் ஆரோக்கியமாகவும் மற்றொருவர் சிக்காகவும் இருப்பதன் காரணம் என்ன என்று நாம் ஆராய்வதில்லை. எந்த அர சாங்கமும், தேசத்தில் வியாதிகளையும் நோய் களையும் பரவவிட்டு விட்டு, அதே சமயத் தில் வியாதியஸ்தர்களைச் சொஸ்தம் செய்ய ஆஸ்பத்திரிகளை நடத்தவும் கட்டவும் ஏரா ளமான பணத்தைச் செலவுசெய்வது முடி யாது. மனிதன் சுகாதாரத்தை, தனி யாகவும் மொத்தமாகவும், பாதுகாக்க வேண்டியது சுகாதார இலாகாவின் கடமை யாகும். ஆகையால் சுகாதார இலாகா, வியாதிகளின் காரணத்தைக் கண்டு பிடிப் பது, சொஸ்தம் செய்வது, இவற்றுடன் மட்டும் நின்றுவிடாமல், பொதுவாக ஜனங் கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடிய ஜலவசதி, சாக்கடை வசதி, குப்பை கூளங் களை நீக்கல், கெட்ட பழக்கங்களைத் தடுத் தல், பிரசவ சௌகரியங்கள், ஜனன மரணப் பதிவு, தொழிலாளர் தேகநிலை போன்ற எல்லா பிரச்னைகளையும் ஆராயவேண்டும்.

சுகாதார விஷயங்களின் எல்லா அம்சங் களிலும் திருப்திகரமான பலனை அடைய வேண்டுமானால், சுகாதார ஸ்தா பனமானது சர்க்கார் ஸ்தல ஸ்தாபனங் கள், பொது ஜனங்கள் இவைகளின் உதவி யைப் பெறவேண்டும். சர்க்காரும் ஸ்தல ஸ்தாபனங்களும், பொது மக்களும், குறிப் பிட்ட கடமைகளையும், உரிமைகளையும் பெற்றிருக்கிறார்கள். கடமையும் பொறுப் பும் இல்லாமல், யாரும் எவ்வித உரிமையை யும் அந்தஸ்தையும் எதிர்பார்க்க முடி யாது. ஆகவே சுகாதார விஷயங்களில் சர்க்காரும் ஸ்தல ஸ்தாபனங்களும் செய்ய வேண்டிய கடமைகள் இருக்கின்றன. சுகா தார இலாகாவிலுள்ள ஒவ்வொரு அதிகா ரியும் செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும் இருக்கின்றன. அதே மாதிரி நகரங்களிலும் கிராமங்களிலும் வசிக்கும் பொது ஜனங்கள் செய்யவேண் டிய கடமைகளும் இருக்கின்றன.

முன்னேற்றமடைந்த பல தேசங்களில் பல வருஷகாலமாக சுகாதாரச் சட்டங்கள் அமுலில் இருந்து வருகின்றன. உதாரண மாக, இங்கிலாந்தில் முதல் முதலாக சுகா தாரச் சட்டம் 1875-ம் வருஷம் நிறை வேறிற்று. நமது மாகாணத்தில் சுகா தாரச் சட்டம் கொண்டுவருவதற்கு பல வருஷங்களாகவே யோசித்துக் கொண்

டிருந்தார்கள். 1929-ம் வருஷத்தில் ஒரு நகல் மசோதா தயாராயிற்று. பிற்பாடு அது மாற்றப்பட்டு மிகவும் ஜாக்கிரதையாகவே வெகு நாட்கள் ஆராயப்பட்டது. அப்படி மாற்றப்பட்ட மசோதா சிற்சில சீர்திருத்தங்களுடன் இப்போது சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக ஆகி யிருக்கிறது. இந்தியாவில் சென்னைதான் முதன் முதலாக சுகாதார சம்பந்தமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. வியாதிகளைத் தடுக்கவும் எல்லா வைத்திய விஷயங்களையும் கவனிக்கவும் முதன் முதலாக சுகாதார இலாகாவை ஏற்படுத்தியதுகூட நமது மாகாணமே யாகும்.

நமது மாகாணத்தின் சுகாதாரத்தை பாதுகாக்கத் தேவையான எல்லா அம்சங்களையும் கொண்டிருக்கிறது சென்னை சுகாதாரச் சட்டம். பொது ஜனங்களும், ஸ்தல ஸ்தாபனங்களும், சுகாதார இலாகா அதிகாரிகளும் தங்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து சுகாதார அபிவிருத்தி என்ற லட்சியத்தை அடைவதற்கு எல்லோரும் ஒத்துழைப்பதற்காக, ஒவ்வொருவர் கடமைகளைப்பற்றியும் பொறுப்புகளைப்பற்றியும் குறிப்பாக சட்டத்தில் போட்டுவிடுவது அவசியமென்பதை ஒப்புக்கொள்வார்கள்.

ஒவ்வொரு மனிதனும், அவன் கிராமத்தில் இருந்தாலும்சரி, நகரத்தில் இருந்தாலும் சரி, சுகாதார விஷயத்தில் அயலானுக்குச் செய்யவேண்டிய கடமை அவனுக்கு இருக்கிறது. உதாரணமாக, உங்கள் பக்கத்து வீட்டுக்காரர் வீட்டைச் சுற்றி குப்பை கூளங்களைப்போட்டு அதனால் ஈக்களை மொய்க்கவிட்டு அவை உங்கள் ஆகாரங்களில் வந்து உட்கார்ந்து வியாதியை உண்டாக்குவதை நீங்கள் அனுமதிப்பீர்களா? இன்னும் சாக்கடைத் தண்ணீரையோ அல்லது மற்ற விஷ பதார்த்தத்தையோ விட்டு உங்கள் குடி தண்ணீரை அசுத்தப்படுத்தி குடும்பத்தை காலராபோன்ற வியாதிக்குள்ளாக்குவதை அனுமதிக்க முடியுமா? அவர் குடும்பத்தில் காலரா, பிளேக், அம்மை போன்ற கொள்ளைநோய்கள் வந்தால் அவற்றைப் பரவாமல் தடுப்பதற்காக உடனே சுகாதார இலாகாவுக்குத் தெரிவிக்கும்படி அவரைச் 'சட்டப்படி கட்டுப்படுத்த வேண்டாமா? இப்படிச் செய்யாவிட்டால் வியாதி பரவி, உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் அபாயம் உண்டாகாதா? மேற் சொன்னவைபோன்ற அபாயங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ள சட்டபூர்வமான கட்டுப்பாடுகள் வேண்டியதன் அவசியத்தை தயக்கமின்றி எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். மூட நம்பிக்கைகளாலும் அசட்டுப் பழக்கங்களாலும் பல அபாயங்கள் நிகழ்வது உண்மைதான். சில சமயங்களில் அப்படிப்பட்ட அபாயங்கள் கவனக் குறைவினாலும் ஏற்படுகின்றன. ஆகையால்தான் சட்ட ஸ்வரூபத்தில் ஜனங்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் தெரிவித்தல் அவசியமாகிறது.

அதைப் போல சுகாதார விஷயங்களில் ஸ்தல ஸ்தாபனங்களின் கடமை தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முனிஸிபாலிட்டி, பஞ்சாயத்து, ஜில்லா போர்டு போன்ற ஸ்தல ஸ்தாபனங்கள் தங்கள் பொறுப்பிலுள்ள ஜனங்களின் சுகாதாரத்தைக் கவனித்துக் கொள்ள வேண்டியது முக்கியம். கிராமத்தாருக்கு ஜல வசதி செய்து கொடுப்பதும், சாக்கடை வசதிகள் அமைத்துக் காப்பாற்றிக் கொடுப்பதும், சரியான இடங்களில் போதுமான கக்கூஸ்கள் கட்டிக் கொடுப்பதும், அசுத்தமான இடங்களைச் சுத்தப்படுத்தும்படி செய்வதும், ஆகார விற்பனையை நிர்வகிப்பதும், சந்தை திருநாள் போன்ற சந்தர்ப்பங்களில் சுகாதார ஏற்பாடுகள் செய்வதும் ஸ்தல ஸ்தானபனங்களின் கடமைகளாகும். சட்டத்தில் இவையும் இவை போன்ற ஸ்தல ஸ்தாபனங்களின் கடமைகளும் கூறப்பட்டிருக்கின்றன. ஸ்தல ஸ்தாபனங்கள் சுகாதாரத்திற்கு தங்கள் வரும்படியில் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டாயமாக ஒதுக்கி வைக்க வேண்டும். ஆனால் விசேஷ சந்தர்ப்பங்களில் இந்த விதியைத் தளர்த்த சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

சுகாதார சட்டத்தை நடத்தும் அதிகாரிகளின் கடமைகள் தெளிவாகச் 'சட்டத்தில் கூறப்பட்டிருக்கின்றன. தொத்து வியாதி எங்கே இருக்கிறதோ அங்கே

போய் இடத்தைப் பார்வையிடுவது சுகாதார ஆபீஸரின் கடமையாகும். வியாதிஸ்தரை தனியான இடத்திற்குக்கொண்டு போவதற்கும் பாதுகாப்புக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். தொத்து வியாதி கேஸ்களில் அவர் வீட்டிலுள்ளவர்களைக் காலி செய்யும்படி செய்து, ஈக்கள் எலிகளைக் கொன்று வியாதி பரவாதபடி செய்து வீட்டை மறுபடியும் வாசம் செய்ய லாயக்காகச் செய்ய வேண்டும்.

அதைப் போல அவர் செய்ய வேண்டிய கடமைகள் பல இருக்கின்றன. பொது சுகாதாரம், ஆகார நிர்வாகம், நியூஸென்ஸ் செய்வதைத் தடுத்தல், திருவிழா போன்ற இடங்களில் சுகாதாரத்தைப் பாதுகாத்தல் முதலியன. ஆகார விஷயமாக, காப்பி ஹோட்டலை மேற்பார்வை செய்து, ஆகாரத்தைச் சுத்தமாக செய்து போடும்படி அவர் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று நீங்கள் எதிர் பார்க்கிறீர்களல்லவா? விஷம் சேர்த்த பதார்த்தமோ, கலப்படமான வஸ்துவோ விற்பனையாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவர் கடமையல்லவா?

நிர்வாக விஷயத்தில், மாகாணத்துக்கு ஓர் சுகாதார அட்வைஸரி போர்டு அமைப்பதற்கும், சுகாதார டைரக்டர் தம் வேலையை நன்றாகச் செய்வதற்கு வேண்டிய அதிகாரங்களைப் பெறவும், அதிகாரிகள் வேலை நடத்தப் போதுமான ஆட்களை சட்ட பூர்வமாக வைத்துக் கொள்ளவும், ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

ஆகவே, இந்தச் சட்டம் இயற்றும் போது சுகாதார நிர்வாகத்தின் எல்லா அம்சங்களையும் ஆராய்ந்திருக்கிறார்கள். பொது ஜனங்களின் கடமைகள் சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவர்கள் உரிமைகளும் கூறாமல்விட்டுவிடப்படவில்லை. அதேபோல ஸ்தல ஸ்தாபனங்கள், முனிசிபாலிடிகள், பஞ்சாயத்துகள் ஜில்லாபோர்டுகள் இவைகளின் கடமைகள் பொறுப்புகளுடன் விவரமாகக் கூறப்பட்டுள்ளன. சுகாதார அதிகாரிகளான நாங்கள் சட்டத்தினால் உண்டான எங்கள் கடமைகளை உணர்ந்திருக்கிறோம். வறுமை, மூட நம்பிக்கை, அறியாமை என்னும் தடைகளை நாங்கள் நீக்கவேண்டியிருக்கிறது. கிராம ஜனங்கள் இந்தச் சட்டத்தை வெற்றியாக்க எங்களுடன் ஒத்துழைக்க வேண்டியதால் போதுமான பொதுஜன ஆதரவு எங்களுக்கு வேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களுடன் எங்களுடன் ஒத்துழைத்தல் வேண்டும். அவர்கள் உதவியில்லாமல் சுகாதார அபிவிருத்திக்கான எந்தத் திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது. சட்டத்தின் கீழுள்ள எங்கள் பொறுப்பையும் ஆரம்பத்திலேயே எங்கள் முன்னுள்ள இடையூறுகளையும் உணர்ந்திருப்பதால், இந்த சட்டத்தை நிறைவேற்ற சம்பந்தப்பட்ட எல்லோரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம்.

சுகாதார இலாகா சர்க்காரின் தனி நிர்வாக இலாகாவாக 1922-ம் வருஷம் ஏற்பட்டது. சென்ற 16 வருஷ காலமாக, வியாதிகளைத் தடுப்பதற்கான வைத்தியத்தின் எல்லா அம்சங்களையும் சேர்த்துக் கொண்டு தன் வேலைகளில் முன்னேற்றமடைந்திருக்கிறது. இடைவிடாமல் பிரசாரம்செய்தும், ஸ்தல ஸ்தாபனங்கள், பொது ஜனங்கள் உதவியைப்பெற்றும் இந்தஇலாகா அபிவிருத்தியின் அவசியத்தை நிரூபித்து விட்டது. சட்டசபைகளில் செய்யப்பட்ட விவாதங்களிலிருந்தும், வேறு பல இடங்களில் வெளியிடப்பட்ட அபிப்ராயங்களிலிருந்தும், சுகாதாரச் சட்டம் நமது மாகாணத்திற்கு அவசியம் என்ற ஏகமனதான மனப்பான்மையை அறியலாம். சரியான சமயத்தில் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. விவாதத்தின்போது கூறப்பட்ட சிற்சில வேறுபாடான அபிப்ராயங்கள் சில பிரிவுகளின் கீழுள்ள சில்லரை விஷயங்களைப் பற்றியதாகும். சட்டப்புத்தகத்தில் எழுதப்பட்ட இந்த புதுச்சட்டம் வெகு நாட்களாக நாம் பிரசாரம் செய்துவந்த மூலாதாரமான சுகாதாரக் கொள்கைகளை தன்னகத்தே கொண்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டம் கல்வி போதனைசெய்யும் சட்டம் என்று நாங்கள் நினைக்கிறோம். இந்தச் சட்டத்தின் உபயோகத்தைப்பற்றிச் சந்தேகப்படுபவர்கள் சிலர் இருப்பார்களானால், அவர்களை நாங்கள் எங்கள் வழிக்குக் கொண்டுவந்துவிடுவோம்.

# ஒரு தொலையாத இரவு

(ஸ்ரீ ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.)

எமர்சன் (Emerson) பரமாத்மா (Over-soul) என்கிற கட்டுரையில் மனத்தின் விசித்திர நிலையைப் பற்றிப் பேசுகிறார். ஒரு தருணம் ஓர் ஊழிக்காலம் ஒரு நொடியளவுக்குள் சுருங்கி விடுகிறது; மற்றொரு தருணம் ஒரு கணப் பொழுது கணக்கில் ஊழிகளாக மாறி விடுகிறது. மனிதனுடைய ஓர் அனுபவத்தை அழகிய சிறு வாக்கியங்களில் அவர் வடிக்கட்டி விட்டார்.

இன்ப அலைகளின் சிகரத்தின் மீது இனிதாய் அமர்ந்து விட்டால், முன் விரிந்து கிடக்கிற எவ்வளவு பெரிய காலக் கடலையும் இலகுவாய் நாம் கடந்து விடலாம்; துக்க நிலையில் ஒவ்வொரு அலையும் ஒரு கடலைப்போலப் பயங்கரமாய் நிற்கும். எல்லாம் உள்ளத்து நிலையைப் பொருத்தது.

சித்திரவதையில் சில சமயத்தில் மனஞ் சாம்பும்; சில வேளையில் கோபத்தில் சிறிக்கொந்தளிக்கும்; மற்றொரு கணத்தில் பேருவகை நறவம் மாந்திக் களிநடனம் புரியும். உணர்ச்சிப் புயல்கள் உணர்ச்சியுள்ள உள்ளத்தில்தான் ஓங்கியடிக்கும். ஒன்றுக்கும் அசையாத களிமண் போல உணர்ச்சியற்று உலகத்திற்கு பாரமாயிருக்கும் மனிதர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அதிக உணர்ச்சியுள்ளவர்கள் காயகர்களும், கவிகளும், பக்தர்களுந்தான். ஒருவனுடைய உணர்ச்சி சங்கீதமாய் வழிந்து விடுகிறது; மற்றொருவனுடைய உணர்ச்சி தனிச் சிற்பமாய் உறைந்து விடுகிறது; ஓவியக்காரனின் உணர்ச்சி ஒப்பற்ற ஓவியமாய் உயிர்பெற்றெழுந்து விடுகிறது; கவிகளின் உணர்ச்சிகள் செஞ்சொற்கள் பாடல்களாக மடைதிறந்த வெள்ளம் போல வழிந்தோடுகின்றன. பக்தன் ஒரு கவியாயு மிருந்துவிட்டால், அவனுடைய உணர்ச்சிகள் ஒரு அலாதியான அழகு முத்திரை பெற்று விளங்குகின்றன என்பதில் சந்தேகமில்லை. வைஷ்ணவ பக்தர்களில் ஒரு சிகரமாய் மிருந்து போற்றப்படுபவர் நம்மாழ்வார். அவருடைய அனுபவம் பல சுருதியில் எழுகிறது.

பகவானைக் கண்ட பேருவகையில் "நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை" என்று ஒரு சமயத்தில் இறுமாப்புக் கொண்டவருக்கு ஓர் இரவு நரக வேதனையாய் விட்டது.

ஊரெல்லாம் அடங்கிவிட்டது. ஒரு நடுநிசி. ஓர் அரவமும் இல்லை. உலகத்திலுள்ள நீர் நிலைகளெல்லாம் அசைவற்று நிற்கின்றன. கண் விழித்து நிற்பவர் ஆழ்வார் ஒருவர்தான். மற்றதெல்லாம் ஒரு பேர் உறக்க மந்திரத்தில் அகப்பட்டு விட்டது. ஆழ்வாருக்கு, முன் எமர்சன் சொன்னது போல, இருள் ஊழியாய் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. பயங்கரமான தோற்றம்; அதற்குக் கங்கு கரையில்லை. இரவு, இரவு, எங்கும் இரவு. புறத்திலும் இருள், அகத்திலும் இருள்.

அவ்விருட்டில் ஆழ்வார் திகைத்து நிற்கிறார்; கதறுகிறார். பதில் வெளியிலிருந்துமில்லை; உள்ளிருந்துமில்லை; இருட் கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதுபோல அவருக்குப் படுகிறது; உறக்கக் கூவுகிறார்.

ஊரெல்லாம் துஞ்சி உலகெல்லாம்
நள்ளிருளாய்
நீரெல்லாம் தேறி ஓர் நீளிரவாய்
நீண்டதால்
பாரெல்லாம் உண்ட நம் பாம்பணையான்
வாரானால்
ஆர்? எல்லே! வல்வினையேன் ஆவி
காப்பார் இனியே
தெய்வங்காள்! என் செய்கேன்?
ஓரிரவு ஏழூழியாய்
மெய் வந்து நின்று எனதாவி
மெலிவிக்கும்.

* * *

இந்த நீண்ட ஓலத்திலே இருளின் நீட்சியையும் நாம் உணர்கிறோம். பாட்டின்

(80-ம் பக்கம் பார்க்க)

# மலர்ந்த வாழ்க்கை

(ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரம்)

மட்டற்ற மகிழ்ச்சியுடன் என்னை ஒரு முறை திரும்பிப்பார்த்தாள். அவள் கண்களில் ஆனந்தம் ததும்பி வழிந்துகொண்டிருந்தது. சரிந்திருந்த தன் முந்தானையை அள்ளி இடுப்பில் செருகிக்கொண்டே "சாவித்திரி, போய் வருகிறேன்" என்று மிருதுவாகச் சொன்னாள். சற்றுத் தயங்கி என்முகத்தையே பார்த்துக்கொண்டிருந்து விட்டு மெட்டிகள் ஒலிக்க தன் கணவன் 'சமிக்ஞை' செய்யவும் சரேலென்று வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

வண்டி கண்ணுக்கு மறையும்வரை அங்கேயே நின்று கொண்டிருந்தேன். பின்பு திரும்பி என் அறையில் போய் உட்கார்ந்து கொண்டேன். மனம் சோர்வு கொண்டு சலித்தது; அசைவுகொண்டு அயர்ந்தது. இருப்புக் கொள்ளவில்லை. பின்பு அவர்கள் போன தடம்புறம் பார்த்துக்கொண்டு ஜன்னலருகே நின்றுகொண்டிருந்தேன். அவளை நான் அகஸ்மாத்தாகச் சந்தித்தேன். நடுவழியில் கொஞ்ச நாள் என்னுடன் இருந்தாள். பின்பு அவள் தன் பிரயாணத்தைத் தொடர்ந்து விட்டாள். இப்போது போய்க்கொண்டிருக்கிறாள். துவண்ட புஷ்பத்தைப் போன்ற அவளுடைய தோற்றம்தான் என்னை முதலில் வசப்படுத்தி விட்டது. சுகம் முழுதும் சூறைக்காற்றில் தூற்றப்பட்ட தன் கதையை என்னிடம் சொல்லும்போது, என் மனம் நடுங்கியதை அவள் கண்டாளா? அல்லது தான் பிரிந்து போவதால் ஒரு ஹிருதயத்தில் தீராத மனவலியை ஏற்றுகிறோம் என்பதை யாவது அவள் அறிந்து கொண்டாளா? பாவம்! அவளுக்கு இது தெரியவேண்டாம். அந்த மலர்ந்த புஷ்பத்தின் மணம் முழுவதும் காற்றில் கலந்து வீணாகி விடுமே என்று, ஏங்கியிருந்தபோது நுகர்வதற்கு இளங்கரம் ஒன்று கைநீட்டி விட்டது. அவள் வாழ்வில் வெள்ளி முளைத்து விட்டது. அவள் வாழ்க.

"ஊரிலே அவள் புருஷனுக்குப் பிடிக்கவில்லையாம். இங்கிலீஷ் படிச்சவனும். இந்தக் கிராமியத்தைக் கண்டாலே முகத்தைத் திருப்பிக்கொள்வானும். பாவம்! வாழும் வயசிலே இப்படித் தாய்வீட்டிலே தவம் கிடக்கிறாள்" என்று பத்மா சொன்னாள்.

"இந்த புண்ணியவதியை திரஸ்கரித்த மனிதன் உண்மையிலேயே கண் இல்லாதவனுய்த்தான் இருக்கவேண்டுமென்று நான் சத்தியம் செய்வேன்" என்று அவளிடம் சொன்னேன்.

"ஆமாண்டி, அவள் புருஷன் கண்ணுடி வைச்சுண்டு இருக்கானும்" என்று சொல்லிச் சிரித்தாள் பத்மா.

அன்றையிலிருந்து லக்ஷ்மியுடன் நெருங்கிப் பழகினேன். என்னிடம் அவளும் அப்படி உயிராக இருந்தாள். அந்த ரங்கத்தில் எறிந்துக் கொண்டிருக்கும் சிதைந்த கனவுகளைச் சொல்லி கண்ணீர் பெருக்குவாள். "லக்ஷ்மி அழாதே, என்றுவது ஒரு நாள் வருவார். வராமலா போய் விடுவார்?" என்று நான் ஆறுதல் சொல்லுவேன்.

முந்தாநாள் சாயந்திரம் லக்ஷ்மி மகிழ்ச்சிப் பெருக்கொடு ஓடிவந்தாள். ஆனந்தக் காற்றை சுவாசித்துக்கொண்டே அவள் சொன்னாள். "சாவித்திரி, என் ஆத்துக்காரர் வந்திருக்கார். அப்பாவும் அவரும் வெளித் திண்ணையிலே பேசிக்கொண்டிருக்கா. என்னை அழைச்சுண்டு போகத் தான் வந்திருக்காராம்."

நான் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். எனக்கு அவள் கணவனிடம் போவதுபற்றி ஒருபுறம் சந்தோஷமிருந்தாலும், பிரிந்துவிடுகிறாளே என்று "போனால் என்னை மறந்துவிட மாட்டாயே" என்றேன். அவள் திடுக்கிட்டு என் முகத்தைப் பார்த்தாள். "சாவித்திரி!" என்று ஆரம்பித்தவள் மேலே பேசவில்லை. அந்தக் குரலின் த்வனி

என்னை என்னென்னவோ செய்துவிட்டது. கொஞ்சநேரம் மகா மௌனத்திலே இரண்டு ஹிருதயங்கள் பேசிக்கொண்டன. விழிக்கடையில் முத்துப்போல் தேங்கிவந்த தண்ணீரைத் துடைத்துக்கொண்டாள், என் கையை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டு "இன்று நான் போகிறேன், அக்கா! அந்தகாரத்தின் நடுவே ஜோதி கண்டது உன் பிரார்த்தனையின் பலனாகத்தான் இருக்கும்" என்றாள்.

அவள் என்னை 'அக்கா' என்று அழைத்தவுடன் என் தேகத்தில் புல்லரிப்பு எழுந்தது. சொல்ல முடியாத ஒரு இன்பப் போதை என்னை மயக்கத்தில் ஆழ்த்தியது. அப்படியே இரண்டு கைகளாலும் அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டு "போய் வா அம்மா, வரும் போது ஒரு சின்னப் பாப்பாவையும் கொண்டு வர வேண்டும்" என்றேன்.

அவள் போய் விட்டாள். என்னிடம் விடை பெற்றுக் கொண்டு வாழ்க்கைப் புத்தகத்தின் மற்றொரு அத்தியாயத்தை படிக்க ஆரம்பித்திருக்கிறாள். எட்டாதமல் எங்கோ தூரத்திலிருக்கிற அந்த வாசகத்தின் மெல்லொலி கூட என் செவியில் இப்போது விழப் போவதில்லை. ஆனாலும் என் மனம் கற்பனை கொண்டு கனாக் காண்கிறது.

நான் என்னையே சில சமயங்களில் கேட்டுக் கொள்கிறேன். "மனக்கடலே! நீ வேண்டுவது யாது? புண்பட்ட ஹிருதயத்தையும் அதனுள்ளிருக்கும் நோவின் பாதையையும் நீ அறிய விரும்புகிறாயா? உணர்ச்சியின் உச்சாணிக் கிளையில் ஊசலாடும் மனித உள்ளத்தின் பளுவை அறிய ஆசைப்படுகிறாயா? அவற்றின் சுக துக்கங்களில் பங்கெடுத்துக் கொள்வதில் உனக்கென்ன அவ்வளவு ஆசை? நீ எதை சதா நினைத்துக் கொண்டிருக்கிறாயோ, எதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறாயோ அதாகவே நீயும் ஆகி விட்டால்............"

மனம் திக்கென்று நிறுத்திக் கொள்கிறது.

---

(78-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓசையே அதைக் கவனிக்கச் செய்கிறது. அவ்வளவு அழகாய்ப் பாட்டமைந்து கிடக்கிறது. இவ் விருட்டுக் கப்பால் ஒரு ஒளி வெள்ளம் ஓடுகிறது. அது இப்பொழுது ஆழ்வார் கண்ணுக்குப் புலப்படவில்லை. அகமனத்தின் ஆழத்தில் "நீதான் வேண்டும், நீதான் வேண்டும், உன்னையன்றி வேறோர் சரண் அறிந்திலேன்" என்ற ஒலி சதா ஒலித்துக் கொண்டிருக்கிறது; அதுவும் இவர் செவிகளில் விழவில்லை.

"இருட்டில் ஒளி கரந்து நிற்கிறது. சண்டமாருதத்தில் சாந்தம் நிற்கிறது. என் அகமனம் என்றறியாமல் உன்னையே நாடுகிறது" என்று தாகூர் கீதாஞ்சலியில் மொழிகிறார்.

இந்த இருட்டு விடியற்கால முன் தோன்றுகிற இருட்டுத்தான். இவ்விருட்டுக் கலைகிற வரையில் ஒவ்வொரு ஆத்மாவும் அமைதியாய்க் காத்துக்கொண்டிருக்க வேண்டியதுதான். இவ்விருட்டுப்பகவானை நாடுகிற ஒவ்வொரு பக்தனின் நீண்ட பாதையில் இது குறுக்கே நிற்கிறது. ஆனால் இருள் சூழ்ந்த கடல்களுக்கும் மலைகளுக்கும் காடுகளுக்கு மப்பால் அவனுடைய அருட்கோயில் அதிக சோபையோடு மின்னுகிறது. அந்த உயிரளிக்கிற எண்ணத்தில்தான் மனிதனுக்கு ஆறுதலும் அமைதியும்.

# இராக் கனவு

(ஸ்ரீ. வி. ஆர். சுந்தரராமன் எம். ஏ.)

மலட்டூரிலுள்ள சுமார் பதினைந்து வக்கீல்களுக்குள் வரும்படியில் பலத்தவர் அகோரமையர் ஒருவரல்லர் என்றாலும் வேறு பல துறைகளில் அவர் அவ்வூரில் பெயர் பெற்றிருந்தார். வக்கீல் தொழிலுடன் லேவாதேவியும் சேர்ந்து நடத்தி வந்தது அவ்வூரில் வக்கீல்களுக்குள் அவர் ஒருவரே. அத்துடன் அவரிடம் கல் மனதும் கிராதகத் தன்மையும் கூடியிருந்தன. தன் குடும்பச் செலவிற்குப் போதுமான அளவு தான் வக்கீல் தொழிலில் அவர் சம்பாதிக்க முடிந்தது. ஆனால் தன் மாமனாரிடத்திலிருந்து சில மோசமான வழிகளில் அபகரித்து வைத்திருந்த மூல தனம் அவருக்குக் கொஞ்சம் உண்டு. ஆரம்பத்தில் அதைத்தான் அவர் தன்னுடைய கொடுக்கல் வாங்கல் வியாபாரத்திற்கு முதலாக உபயோகித்துக் கொண்டார்.

அவ்வூரில் இத்தொழிலைக் கையாண்டு வந்த வேறு சிலர் உண்டென்றாலும் அதிக வட்டி வாங்குவதிலும் அதை நிஷ்கண்டகமாய் வசூலிப்பதிலும் அவர்களை இவர் நல்லவர்களாக்கிவிட்டார்.

கடன் கொடுத்து வாங்குவதில் அகோரமையர் அனுசரித்த முறைகளே அலாதி. தான் உண்மையில் கொடுத்தது நூறு ரூபாய்தானிருக்கும். ஆனால் தஸ்தாவேஜியில் இருநூறு ரூபாய்க்கு என்று எழுதி வாங்குவார். அப்பொழுது தான் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்ற ஓர் பயமிருக்கும் என்று சொல்லி, தான் செய்வது நியாயந்தான் என்று சாதிப்பார். வட்டியும் மாதத்திற்கு ரூபாய் ஒன்றிற்கு ஒரு அணாவிற்குக் குறையாமலிருக்கும். அதாவது வருஷத்திற்கு நூற்றிற்கு ரூபாய் எழுபத்தைந்துதான்! வட்டியும் மாதாமாதம் முதல் மூன்று தேதிகளுக்குள் செலுத்தியாய்விட வேண்டும். இல்லாவிடில் வட்டிக்கு வட்டி வசூலிக்கப்படுமென்று ஒரு ஷரத்தும் எழுதிக் கொள்ளுவார். இன்னும் இது போன்ற பத்திரங்களில் அவர் எழுதும் ஷரத்துகளே பல ரகம்!

இவ்வளவு நிர்ப்பந்தங்களுக்கும் உடன்பட்டு இவரிடம் சம்பந்தம் வைத்துக் கொள்ளும் துர்ப்பாக்கியரின் முடை எவ்வளவு பரிதாபகரமான தென்பது சொல்லாமலேயே விளங்கும். எனவே, அவரிடம் பணம் வாங்கியவர்கள் ஒரு நாளும் மீளுவதில்லை யென்பது நாளடைவில் அவ்வூரில் ஒரு பெரும் பழமொழியாயிற்று.

இவ்வளவு வட்டி கொடுக்கப் பாத்தியதைப்பட்டுக் கடன் வாங்குவாரின் கஷ்டம் விடிவதேது? ஆகவே அகோரமையரிடம் பணத்திற்காக அண்டினவர்களெல்லாம் தமது சொத்துக்களை அவருக்கே கொட்டிக் கொடுத்து விட்டுக் கடைசியில் ஆண்டியாவதே சகஜமாயிற்று.

மலட்டூர் வாசிகள் பெரும்பாலும் விவசாயிகளே. ஊரும் அதன் பெயருக்கேற்ப நீர்வளத்தில் மலடாகவே யிருந்தது. ஆற்று அணைகளிலிருந்து ஆதரவு பெறாத ஒரு ஏரிதான் அவ்வூரின் முக்கிய நீர் நிலை. ஆகையால் அவ்வூரிலுள்ள நஞ்சை புஞ்சை நிலங்கள் "மானம் பார்த்த" பூமிகளாகவே இருந்தன. சரிவர மழை உண்டானால் ஊரில் விளைச்சல் கொழித்திருக்கும். இல்லாவிடில் வெறும் பஞ்சந்தான். அகோரமையரிடம் பணத்திற்காக அவ்வூராரில் பலரைத் துரத்தியது விளைச்சல் இல்லாமைதான். ஒரு பக்கம் குறைக்க முடியாத குடும்பச்செலவுகள். ஒரு பக்கம் சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய வரிப்பணம். பயிர் எவ்வளவு சாவியாயிருந்த போதிலும் வரியில் தள்ளுபடி யென்பது கிஞ்சித்தேனும் கிடையாதாகையால் கடன் வாங்காமல் எப்படிச் சமாளிப்பது? அடுத்த வருஷம் சரிவர விளைந்தால் பழைய கடன்களை யெல்லாம் சேர்த்துக் கொடுத்து விடலாமென்னும் நம்பிக்கையொன்றே அவ்வபாக்கியசாலிகளை அகோரமையரிடம் பணம் வாங்குவதிலுள்ள அவ்வளவு

கொடூரமான நிபந்தனைகளுக்கும் இணங்கச் செய்தது.

ஸ்ரீமான் ராமசேஷய்யரும் மலட்டூரில் அகோரமையர் வலைக்குள் அகப்பட்டுத் தவித்துக்கொண் டிருந்தவர்களுள் ஒருவர். பூர்வீகத்தில் அவர் பசுங்கரையைச் சேர்ந்தவர் என்பதைக் குறிக்கவே அவருடைய பெயருக்குமுன் அவ்வூரின் பெயர் அடை மொழியாய் விளங்கிற்று. ஏனென்றால் அக்குளிர்ச்சி பொருந்திய பெயரையுடைய (ஏன், உண்மையிலேயே கூட செழிப்புள்ள) பசுங்கரையில் அவருக்குச் சொந்தமாக ஒரு குழி நிலம்கூடத் தற்போது இல்லை. ஏனென்றால் தனக்குக் கலியாணம் நடந்த மறுவருஷமே தன்னுடைய மாமியார் ஊரான மலட்டூருக்குப் புறப்பட்டு வந்தவர், அது முதல் அங்கேயே ஐக்கியமாகி விட்டார். தன்னுடைய மாமியாரும் ஏராளமான நில புலன்களுடன் பால்யத்திலேயே விதவையான படியாலும் அங்கு வேறு ஆண் சந்ததியில்லாததாலும் ராமசேஷய்யர் மலட்டூரில் நிரந்தரவாசம் வைத்துக் கொண்டதும் அவர்களுக்குச் சௌகரியமாகவேயிருந்தது.

மலட்டூரில் பசுங்கரை ராமசேஷய்யர் வீடு (அதாவது அவர் மாமியார் வீடு) அக்கிரகாரத்தின் மத்தியில் உள்ள ஒரு மாடி வைத்துக் கட்டுக் கோப்புடன் கட்டப்பட்ட அழகிய வீடு. அதில் முன்புறமும் பின்புறமுமாய் இரண்டு கட்டுகள் உண்டு. அவ்விரண்டு கட்டுகளிலும் காணப்பட்ட பல களஞ்சியங்கள் அக்குடும்பம் ஆதியில் வெகு செல்வாக்குடன் வாழ்ந்திருந்ததென்பதற்கு அறிகுறியாக யிருந்தன. ஆனால் நாளடைவில் விளைச்சல் இல்லாமை ஒருபக்கமும் கலியாணச் செலவுகள் ஒரு பக்கமுமாய்ச் சேர்ந்து அக்குடும்பத்தைச் சீர்குலைத்து விட்டன. ஆகையால் குடும்பத்தின் நிலங்களெல்லாம் பெரும்பாலும் அகோரமையருக்கு முதலில் கடனுக்காக அடமானமாய் எழுதி வைக்கப்பட்டுக் கடைசியில் அவருக்கே சொந்தமாய் விட்டன.

ராமசேஷய்யருக்கு மூன்று பெண்கள். முதல் இரண்டு பெண்களைக் கல்யாணம் செய்து கொடுத்தாகிவிட்டது. அவர்கள் அதிர்ஷ்ட சாலிகள். சௌகர்யமாக புருஷன் வீட்டில் இருந்தார்கள். ஆனால் கடைசிப் பெண் ஜானகிக்கு இனிமேல்தான் கல்யாணம் நடக்கவேண்டும்.

ஜானகிக்கு வயது பதினலு ஆகிவிட்டது. ஆனால் இரண்டு வயது கூடவே மதிக்கும்படி தோன்றினள். அவள் நல்ல புத்திசாலி. தங்கப் பதுமை போல் அழகாக இருந்தாள். எப்படியாவது அந்த வருஷம் அவள் கல்யாணத்தை முடித்து விட வேண்டும் என்று துடிதுடித்தார் ராமசேஷய்யர்.

"ஐயோ! இந்த அகோரத்திடமா போவது பணத்திற்கு? இவனிடம் அகப்பட்டுக் கொண்டுதான் திண்டாடிப் போய்விட்டேனே! இந்தச் சனியனிடம் போவார்களோ!" என்று ராம சேஷய்யர் சிந்தனை செய்வது வழக்கம். அவர் எவ்வளவோ இடங்களில் பணத்திற்காகக் கேட்டு விட்டார், நில அடமான பாங்கிக்கு மனுப் போட்டார்; தாசில்தாரைப் பார்த்தார். பல பாங்குக் காரியதரிசிகளைப் பார்த்து விட்டு ஏமாந்தார்; ஒன்றும் பலிக்கவில்லை. அகோரமய்யரைச் சரணுகதி அடைவதைத் தவிர வேறு வழியில்லை என்று தோன்றியது அவருக்கு.

ஏற்கனவே சொல்லியபடி அகோரமய்யருக்குச் சொந்தமானது போக ராமசேஷய்யரின் சொத்து பாக்கி அவர் தற்காலம் வசித்து வந்த வீடும் ஒரு வேலி நிலமும் தான். இதையும் அகோரமய்யர் அபகரிக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தார். ராமசேஷய்யர் பணத்திற்காக அலைகிறார் என்று தெரிந்ததும் அகோரமய்யருக்கு ராம சேஷய்யரின் மேல் விசேஷ அபிமானம் உண்டாகி உறவு கொண்டாட ஆரம்பித்தார்.

* * *

'ஐயர்வாள்! நீங்கள்தான் காப்பாற்ற வேணும். இல்லாவிட்டால் நாக்கைப் பிடுங்கிக்கொள்ள வேண்டியதுதான். குழந்தைக்கோ வயது 14 ஆச்சு. இந்தச் சித்திரையில் கலியாணம் பண்ணு விட்டால் நான் உசிரோடே இருக்க முடியாது" என்று ராமசேஷய்யர் அங்கலாய்த்தார்.

"அடே! நீர் எங்கானும் பயப்படுகிறீர்? பகவான்னு ஒத்தன் இருக்கான்.

நான் 1000 ரூபாய் தரேன். விட்டுமேலே எழுதிக் கொடுமே" என்றார் அகோரமய்யர்.

இப்படி அடுத்த அறையில் சம்பாஷணை நடந்து கொண்டிருந்ததை ஜானகி கேட்டாள். வயிற்றில் 'பகீர்' என்றது.

"சரி! நான் நாளைக்குப் பத்திரத்தை வாங்கிக் கொண்டு வரேன்" என்று அகோரம் சொன்ன போது ஜானகிக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை.

"ஐயோ! அக்கா இரண்டு பேர்களும் அப்பாவை இந்த நிலைமையில் வைத்து விட்டுப் போய் விட்டார்கள். நானும் கடைசியாக அவரைப் பரதேசியாகப் பண்ணிவிட்டுப் போக வேண்டுமா? இந்த அகோரம் 1000 ரூபாய் கொடுத்துவிட்டு வீட்டையும் நிலத்தையும் எடுத்துக் கொண்டு போய்விடுவானே. தங்க நிழல் கூட இல்லாமல் அடித்துவிட்டுக் கடைசியில் ஜெயிலில்கூட வைத்து விடுவானே. அப்படியாகிலும் கடன் வாங்கி எனக்கு என்ன கல்யாணம் வேண்டியிருக்கிறது? ஐயோ அப்பா! வேண்டாம்" என்று ஜானகி படுக்கையில் படுத்துக் கொண்டு நொந்து கொண்டாள்.

* * *

கடன் வாங்கிக் கல்யாணம் முடிந்து ஒரு வருஷம் ஆகிவிட்டது. வரும் வெள்ளிக்கிழமை ராமசேஷய்யரின் சம்பந்தி வீட்டார் மலட்டூருக்கு வரப்போகிறார்கள். அவர்களை வரவேற்க ஏற்பாடு செய்ய ராமசேஷய்யருக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவர் திக்பிரமை பிடித்து நின்றார்.

வெள்ளிக்கிழமை காலையில் ஜானகி குதூகலத்துடன் எழுந்தாள். அவளது உடம்பு உத்சாகத்தால் சிலிர்த்தது. பத்து மணி வண்டிக்கு 'எல்லோரும்' வந்து விடுவார்கள். அதற்குப் பிறகு பட்டணம் போகவேண்டும். கல்கத்தா எவ்வளவு பெரிதாக இருக்கும்? அங்கே போய் சந்தோஷமாக இருக்கலாம். சமத்தாக நான் குடித்தனம்செய்து அவரைச் சந்தோஷப் படுத்துவேன். ஆனால் அம்மா அப்பாவை விட்டு விட்டுப் போகவேண்டுமே? அங்கே போனால் திரும்பி எப்போது வரப்போகிறோம்? என்று எண்ணி இன்பமும் துன்பமும் அடைந்தாள்.

அன்று காலையிலிருந்தே ராமசேஷய்யர் முகத்தைப் பார்க்க முடியவில்லை. அப்பா முகத்தைப்பார்க்க ஜானகி திடுக்கிட்டாள். அப்பாவின் முகம் ஏன் இவ்வளவு கோரமாக இருக்கிறது என்று திகிலடைந்தாள். தான் ஊருக்குப் போவதால் மனக்கலக்கமாய் இருக்கிறாரோ என்று நினைத்தாள்.

பத்தரை மணி சுமாருக்கு அகோரம் அமீனாவை அழைத்துக்கொண்டு வாசலில் வந்து நின்றார். "ராமசேஷய்யர்! வாரும் ஐயா வெளியில்! என்ன சொல்லுகிறீர். பணத்தைத் தருகிறீரா? அல்லது......" என்றார்.

ஜானகிக்கு நொடியில் எல்லாம் விளங்கிற்று. ஜப்தி செய்ய வந்துவிட்டார்கள். அதனால் தான் அப்பா காலையிலிருந்து இப்படி யிருக்கிறார். ஆனால், ஐயோ, இந்த சமயத்தில் அவர்கள் வந்து விடப் போகிறார்களே. பகவானே!

"எங்காணும்? சம்பந்தி வரப்போறாள் இன்னிக்கு என்று நான்தான் சொன்னேனே. இந்த சமயத்தில் நெருக்கி என் மானத்தை வாங்கலாம் என்று பார்க்கிறீரா? உமக்குக் குழந்தைகளில்லை? என் குடியையே கெடுக்க வந்திருக்கிறீரே? உமக்குக் கொஞ்சம்கூட இரக்கமில்லையா?"

"வீட்டை வித்துக் கொடுமேங்காணும். பேசறீரே வெட்கமில்லாமல். அமீனா! கழட்டுடா ஊஞ்சலை!" என்று சீறினார் அகோரம்.

அமீனாவும் ஆட்களும் ஊஞ்சலைக் கழட்டினார்கள்.

"ஐயோ! இரும், இரும்! நான் வீட்டை உமக்கே கொடுத்துடறேன். மானத்தைக் காப்பாற்றும். இதோ எழுதிக் கொடுக்கிறேன்" என்று பதறினார் ராமசேஷய்யர்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு நின்றாள் ஜானகி. கண்களில் தாரைதாரையாய் நீர் வழிந்தது. அப்போது வாசலில் வண்டி வந்து நின்றது. சம்பந்தி அம்மாள் உள்ளே வந்தாள். ஆனால் கூடத்தில் நடக்கும் அமர்க்களத்தைப் பார்த்து விட்டு வாசற்படியில் மலைத்து நின்றாள். "என்ன

(88-ம் பக்கம் பார்க்க)

ஒற்றையங்க நாடகம்.

# மீன்வயிற்று மோதிரம்

(கோத்தமங்கலம் ஸ்ரீ சுப்ரமண்யம்)

I

[அஸ்தினபுரியின் வட பாரிசத்திலே ஒரு தென்னந்தோப்பு. அதற்குப் பக்கத்தில் செம்படவர்கள் குடியிருப்பு. முழச் சுவரில் நிற்கும் எட்டடிக் குச்சுகள் ஏராளம். அந்தக் குடிசைகளின் கூரையைக் கூட பழுது பார்க்க இயலாத அந்த ஏழை ஜனங்களுக் கிரங்கினாற் போல் அவர்களால் பயிரிடப்பட்ட சுரைக் கொடிகளும் பீர்க்குக் கொடிகளும் கூரையில் படர்ந்து பட்டுப்போய் ஒழுக்கில்லாமல் காப்பாற்றிக் கொண்டு வருகின்றன. சில பெரிய மனிதர்களுக்கு புஷ்பக் கடை வீதிக்குப் போய் வந்தால் தலைவலி வந்து விடும். ஜவ்வாது இட்டுக்கொண்டால் ஜலதோஷம் பிடித்து விடும். நல்ல நாற்றங்களே இப்படிச் செய்து விடுகின்றன. ஆனால், அந்த மூடர்களுக்கு என்ன சக்தியோ? அந்தக் குடியிருப்பின் பக்கத்திலுள்ள குட்டையின் நாற்றமோ சொல்லி முடியாது. மச்ச வலைகளைக் கசக்கிக் கசக்கி குட்டையே நாறிவிட்டது. வீடுகளைச் சுற்றி பனை ஒலைகளாலும் தென்னை மட்டைகளாலும் கிளுவை முள்ளுமுருங்கை உதி, பூவரசு முதலியவைகளாலும் வேலி (நிறைச்சல்) பிடித்து அதில் வலைகளும் வற்றல் தோரணங்களும் காய்கின்றன.

புதை குழி, ஸ்மசானம் இவைகளில் கூடக் காண முடியாத அளவு பருந்துகளும் அண்டங் காக்கைகளும் பறக்கின்றன. சொரி நாய்கள் குடியிருப்பு நாய்களுக்குப் பயந்து பதுங்கிப் பதுங்கி கெஞ்சும் விழி விழித்துக்கொண்டு திரிகின்றன. கோவிலிலிருக்கும் நவக்ரக விக்ரகங்களைப்போல் வரிசைக் கிரமம் ஒழுங்கு இல்லாத குடிசைகள். அந்தச் சந்துகளில் தரைகள் அசுத்தமோ சொல்லி முடியாது. பானைச் சில்லுகளும் நண்டுஒடுகளும் மீன்முள்ளுகளும் சிதறிக் கிடக்கின்றன. நடப்பவன் காலடியிலிருந்து நெரு நெருவென்று சத்தம் வரும். செம்படவப் பெண்கள் மீனை உரசிக்கொட்டிய ஜலம் காய்ந்த பின், அந்தச் செதில்கள் மட்டும் தரையில் தங்கி, அப்ரகத் தூளை அள்ளி வீசியிருப்பதுபோல் பளபளவென்று ஜொலிக்கின்றன.

இந்தக் குடியிருப்பு மத்தியில் ஒர் தெற்குப் பார்த்த வீடு. அந்த வீட்டு வாசலிலும் மற்ற வீடுகளைப்போல் முதல் நாள் விலை போகாத மீனை மறுநாள்வரை உயிருடன் தண்ணீரில் விட்டு வைத்திருப்பதற்காகத் தோண்டிய குழி ஒன்று இருக்கிறது. பனை ஒலையில் வரகு வைக்கோல் வேய்ந்த ஒரு குதிரைக் கொட்டகைக்குடிசை. இரப்பில் ஒரு நீளக் கவாத்துக் கொடி கட்டி, அதில், விரால் வலை, கொட்டாரி வலை, வீச்சுவலை, தூரி முதலியவைகளைப் போட்டிருக்கிறது. அத்துடன் துணி வலைகளோ என்று நினைக்கும்படி கந்தல் வஸ்திரங்களும் காய்கின்றன.

வீட்டில் ஒரு மூலையில் பரி, பரிச்சால், சிறிய மூங்கில் சிம்புகளால் செய்த பரி, பனை வயிரத்தில் குடைந்து பொத்தவிட்ட பத்தக்கட்டை முதலிய கருவிகளும் இருக்கின்றன. கூறையில் 5, 6, தூண்டில்கள் செருகி யிருக்கின்றன. இரண்டு மூன்று சட்டி பானைகளைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் மீன் பிடிக்கும் சிளி மூங்கில் தூக்குக் கூடைகளும் பூச்சித் தேங்காய் கொட்டாங்கச்சிகளும்தான் இருக்கின்றன. வீட்டின் மத்தியில் செம்படவச்சி உட்கார்ந்துகொண்டு ஒரு வலையின் தலைப்பு ஓரத்தைக் கால் கட்டை விரலில் கோர்த்துக்கொண்டு ஒரு பக்கத்தைப் பல்லில் கடித்துக்கொண்டு கூர்ந்து நோக்கி மண் மணிகளை வைத்துத் தைத்துக் கொண்டிருக்கிறாள். "உஸ், அப்பாடி" என்று பெரு மூச்சு விட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த செம்படவன் வேர்வையைத் துடைத்துக் கொண்டு உட்கார்ந்தான். கையிலிருந்த கூடையை அசிரத்தையாய்ப் போடுகிறான். செம்படவச்சி தலை நிமிர்கிறாள்.]

செல்லாயி :—'வா, மச்சான்' என் இம்புட்டு நேரம்? பட்டணத்துக்குள்ளே நொளஞ்சிட்டா பொழுது போராது கூட தெரியவில்லே? பொளுது மேற்கே சாஞ்சு நீளமா ளெல் விருந்து போச்சு. நீ இப்பத்தான் வரியாக்கும். எங்கிணேயாச்சும் ஆனேயைக் கண்டுகிட்டு அளகு பார்த்துக்கிட்டிருந்தியாக்கும்? எங்கே காசு?

முத்தன் :—(சலிப்புடன்) அடி போ குட்டி! காசுமில்லே ஒண்ணுமில்லே.

செல்லாயி :—(சந்தேகம் தோன்றி) சரிதான். வளியிலே கடையைக் கண்டுக்கிட்டுயாக்கும்? கள்ளுத்தண்ணிக்கு முன்னலே புள்ளேகுட்டியெல்லாம் மறந்துபோயிருச்சோ?

முத்தன்:—(அசட்டுச்சிரிப்புச் சிரித்துக் கூடையை அவள் பக்கம் நகர்த்தி) சும்மா கிட குட்டி! வெளியேதான் வெய்யல் கொளுத்துச்சுன வீட்டுக்குள்ளா நீ கொளுத்துரே. இன்னக்குக் காந்தாயம் மூணு மீனுதான் பட்டிச்சு. அதைத் தூக்கிட்டு நுப்பது வீதி அலஞ்சும் ஒண்ணு கூட விக்கல்லே. கூவுன கூவுலே மென்னி கட்டினதுதான் மிச்சம்.

[செல்லாயி கூடையைத் திறந்து பார்க்கிருள். எதிர் பார்த்த காசு கிடைக்காமல் ஏமாற்றமடைந்த இவளுடைய கண்களில் வெயிலில் வதங்கி சோபை பாய்ந்த மீன்கள் காட்சியளிக்கின்றன. சாப்பாட்டுக்கு மன்ருடும் நம்பிக்கையிழந்த கண்களால் உயிருக்கு மன்ருடும் அந்த மீன்களைப் பார்க்கிருள்.]

செல்லி :—சீ! துப்புக்கெட்ட ஆம்பிளே! புடிக்கத் தெரிஞ்சிகிட்டாப்லே விக்கவுமா தெரிஞ்சு போவும்? உன்னே யாரு விக்கப் போவச்சொன்னது?

முத்தன் :—அதுனுலேதான் மோசம் வந்திடுச்சோ? சும்மா குடுத்துட்டு துண்டை உதரிப்போட்டுக்கிட்டு வந்திடணுமாக்கும்? கத்தின கத்துக்காச்சும் காசி தரவேண்டாமா? படுத்தடியாக் கேட்டா?

செல்லி :—சும்மாயிரு! ஒம் முட்டாத்தனத்துக்கு ஊராரைச் சொல்லாதே.

முத்தன் :—சீ அடக்கு குட்டி! அள்ளி வீசாதே! பரம்படிச்சிட்டு வந்த அண்ணனே படுத்துக்கிடந்த தம்பி எட்டி உதைச்சாப்லே பேசரே.

செல்லி :—[இனியும் அவனைக் கோபிப்பது சரியல்ல என்று கலயத்தில் இருந்த பழஞ்சோற்றுத் தண்ணீரை ஒரு குடுவையில் வடித்துக் கொண்டுவந்து] இந்தா மச்சான்! இந்த நீராரத்தைக் குடிச்சிட்டு ரெண்டு சருகைப்போடு. நீ இப்படி வந்துட்டியே; நான் விக்கப்போய் ஒரு தபாவாச்சும் வெருங் கையோடே வந்திருக்கிறேனுன்னு தான் கேட்டேன். வேறே ஒண்ணுமில்லே.

முத்தன் :—(அதை எடுத்துக் குடிக்கிருன்). அது ஒவ்வொருத்தரு முகராசி! (என்று சொல்லி தன்னுடைய சாமர்த்தியமின்மைக்கு சமாதானம் செய்துக் கொள்ளுகிருன்).

செல்லி :—முகமுமில்லே. ராசியுமில்லே. வாய்க்குச் சோறு வாய்தான் சம்பாதிக்கனும்.

முத்தன் :—ஆமா, அதுக்கான பேச்சைப் பேசித்தானே இருப்பேன். நான் ஊமையனில்லேயே?

செல்லி :—ஊமையாயிருந்தாலும் குத்தமில்லே மச்சான்! வாய் இல்லேனு ஒரு பாடாப்போகும். வாயிருந்தும் உம்மாதிரி ஒரு தொயிலேச் செய்ய வலுவில்லேங்கிர போதுதான் கேவலமாயிருக்கு. சும்மாவா சொன்னுக 'பேசப்போறியோ? சாகப் போறியோ?' ன்னு. பேசிளுப் பொளேக்கலாம் மச்சான்!

முத்தன் :—அதெல்லாம் சரிதான். எக்குத் தெரிஞ்சவரையிலேதான் நானும்....

செல்லி :—(இடைமறித்து) ஆமாமா. வேலே பேசியிருப்பே, வேர்வைக்கு வேலே வச்சியிருப்பே, தண்ணித் துரையிலே தச்ச முள்ளே எண்ணிக்கிட்டிருப்பே. காசைக் குறைச்சா ஆசைக் (ஆயுஸ்) குறைக்கிறமாதிரி நினேச்சியிருப்பே.

முத்தன் :—ஆமா, பின்னே என்ன? வீட்டிலே இருந்துக்கிட்டுக் கூடைப் பேச்சுப் பேசலாம். நீ போனு மாத்திரம்?

செல்லி :—நானு? அதைத்தாஞ் சொல்லவாரேன். கூடையை வச்சுப்பிட்டு உஸ்னு உக்காருவேன். குடிக்கத் தண்ணி கேப்பேன். கையிலே ஊத்துவாங்க. முகத்தைக் கழுவிக்குவேன். ஒரு முடங்கு

குடிப்பேன். நாங் குடிக்கிற தண்ணிலே விட்டிக்காரி மனசு குளுந்து போவும்.

முத்தன் : – இது நல்ல தந்திரம். அப்புறம்?

செல்வி :—அப்பரமா? வெலே என்னனு கேப்பாக. நான் அவுக பெரிய மக புளிக் குளிச்சிச்சா, சின்ன மகளை மாப்பிள்ளே நல்லா நடத்துறானானு இதெல்லாம் கேப்பேன். வெத்திலேயை வாங்கிப் போட்டுக்குவேன். ஒனக்கும் ரெண்டெடுத்து எக்கலிலே சொருவிக்குவேன். அவுக வேண்டியதைப் பொருக்கி வச்சுக்கிட்டு, வெலே கேப்பாக.

முத்தன் :—ஓஹோ அப்படியா!

செல்வி :—இருவே முளுக்கக் கேளு. செல்வி செல்வினுக்கிட்டு புள்ளக் குட்டிக ஓடியாரும். ஒண்ணேவேண்டாம் நட்டு, ஒண்ணேத் தூக்கிடுவேன். இண்ணெண்ணு ஹோன்னு அலறும். எல்லாத்துக்கும் திட்டிகளிச்சி கெட்டி ஓடிப்பேன். எங்க விட்டுக்கு வாரியாம்பேன். எனக்கு சோறு போடரியாம்பேன்.

முத்தன் :—அடிசீ நெறுத்து. சாமானக் குடுத்துட்டு காசு கேக்கிரதுக்கு சாடு மாரி வேலேயா பாக்கணும்?

செல்வி :—இந்தா என்ன சொன்னே? இங்கிட்டுத்திரும்பு. இந்தப் புள்ளேக்குட்டிகளேத் தொட்டுத் தூக்க புண்ணியமில்லே பண்ணி இருக்கணும். எங்கே நிம்போயி தொட்டுப்பிடு. இல்லே தொடவே வேண்டாம். பக்கத்திலே போ. தாணுக்காரன் புடிச்சுக்கொண்டே போயிருவான். கடாசியா நீ பட்டபாடெல்லாம் சொல்லி கஞ்சிக்குச் சாமான் வாங்கணும்; குடுக்கிர காசைக் குடுங்கனு கேப்பேன்.

முத்தன் :—ஒண்ணுக்குப் பாதியாத் தந்தா?

செல்வி :— காலாத்தான் தாட்டுமே. உப்பைக்கேட்டு பாக்கைக்கேட்டு வொதத்துக்குனு பச்சரிசியைக் கேட்டு 1க்கு 3 ஆக வாங்கிடுவேன். இதைத் தவிர பணியாரம் பழஞ்சோரு எல்லாம் எம்புட்டு வரும் தெரியுமா? ஒனக்கென்ன மச்சான் மாவாத்தின்னுப் பணியாரமில்லே? குருடனுக்கு பார்வைத்தானே வேணும்?

முத்தன் :—சரிதான். சீமைச்சமத்தி தான். இன்னக்கிச் சோத்துக்கு?

செல்வி :—இருக்கு உனக்கு. கேப்பை இருக்கும்; களிச்சோறுக்கிக்குவம். அந்த மீனுகளே எடுத்து அரிஞ்சுவை. பலகாரம் விற்கிறவன் பட்டினி கிடந்தாப்லே இல்லாமெ நாமாச்சும் இன்னக்கி கஞ்சிக்கு வெஞ்சனம் கடிச்சுக்கிட்டுக் குடிப்பம்.

முத்தன் :—அட, சோக்குவருது குட்டி! சித்தே இந்தக் கட்டையை தரையிலே போட்டுப் பிரட்டரேன்.

செல்வி :—இல்லே மச்சான்! எனக்கு அரிவாமணையும் அடுப்பையும் கண்டா அலுத்துவருது. அரிஞ்சுவையின்னு இன்னக்கிமட்டும். (முகவாயைப் பிடித்துத் தாங்குகிறாள். முத்தனும் வாயிலிருந்த வெற்றிலே எச்சலே விரலிடுக்குவழியாய் நிரச்சலில் துப்பிவிட்டு அரிவாமணையை எடுத்து நறுக்க ஆரம்பிக்கிறான்.)

முத்தன் :– என்ன குட்டி! வலேயிலே மொம்மரமா யிருக்கியே உம்மீனே வலேயின்னுது. (சிரிக்கிறான்.) நிமிர்ந்து செல்வி இவனே ஒரு பார்வை பார்க்கிறாள். முத்தன் மறுபடியும் சிரிக்கிறான்) அதைத்தாஞ் சொல்ரேன். கெண்டைக்குஞ்சாட்டம் உங்கண்ணு வலேயிலே பாயுரப்போ சொல்லத் தோணிச்சு!

செல்வி :—சரிதான்! நீ என்னமோ பொளவர் மகங்கணக்காத்தான் பேசுவே. பேச்சுப் பராக்கிலே கையை வெட்டிக்கிண்டிராதே! (சரக்கென்று சத்தம். அரிவாமணையில் மீன் சிக்குகிறது.]

முத்தன் :—என்ன குட்டி! மீன் சிரிசா யிருந்திச்சினும் எலும்பு கடிசாயிருக்கு.

செல்வி :— மாங்காயிலே கொட்டை பிடிச்சாப்லே இருக்கும். இதெல்லாம் யாரு கண்டுக்கிட்டாருக்கம்? சரி நான் உலேயை மூட்டரேன் (செல்வி அடுப்படிக்குச் செல்கிறாள். முத்தனே நறுக்க இயலாத அந்த மீனே அரிவாமணையிலிருந்து எடுத்துக் கையால் பிய்க்கிறான். பளீரென்று ஒரு ஒளி கண்ணைப் பறிக்கிறது. அதனுள்ளிருந்து ஓர் மோதிரம் கீழே விழுகிறது.)

முத்தன் :—ஏ குட்டி! இஞ்சே ஓடிவா! இதென்ன பாரு!

செல்வி :—இரு வாரேன்,

முத்தன் :— அடி! வாங்கிரேன். இதைப் பாருவே. ஒங்காலம் முளுக்க கயிட்டப்பட்டாலும் இப்படிச் சம்பாதிக்க

முடியுமா? [செல்வி ஓடிவந்து பார்க்கிருள். அவளுக்குக் குபீரென்று வியர்க்கிறது.]

செல்வி :—அட பாவி! அய்யோ, மோருதமில்லெ! இந்தப் புத்தி எம்புட்டு நாளா? அட உனக்கு மானமில்லே?

முத்தன் :—என்ன குட்டி?

செல்வி :—சீ! நப்பனுக்குத் தெரிஞ்சா மகளைக் களவானிப்பயலுக்கா கட்டிக் கொடுத்தம்னு கண்ணுலே தண்ணி விட்டுரும். நீ ஒரு மனுசனு?

முத்தன் :—அட உங்கப்பனுணெ சொல்லறேன். திருடவுமில்லே திருடவுமில்லே.

செல்வி :—பின்னே இதெப்படி வந்துச்சு?

முத்தன் :—இந்த மீனு வவுத்துக்குள்ளர இருந்துச்சு.

செல்வி :—என்னே யென்ன ஏமாளிப் பய மவன்னு நெனேச்சுப்பிட்டே? கத்தரிக் காயிலே முத்திருக்கின்னு கண்ணவிஞ்சு போகும். உம்மையைச் சொல்லு.

முத்தன் :—என்ன குட்டி! துணியைப் போட்டா தாண்டச் சொல்ரெ? நீயே தான் பாருவெ இந்தா. பாதி நறுக்கிய மீனேக் காண்பிக்கிருன். அவள் பார்க்கிருள். அந்த மீனுக்குள் மோதிரம் இருந்த வடுவை காண்பிக்கிருன்.)

முத்தன் :—ஏளெயாப் பொரந்த பாவம் போதாதா, களவாங்கவுமாவேணும்?

செல்வி:—மச்சான்! கோவிச்சுக்காதே, தப்புத் தண்டாவப் பேசிப் பிட்டேனேன்னு வருத்தப்படாதே. இந்தப் பாரு லோகத்திலே ரோக்கிதை, பணம், ரெண்டும் இருந்திடுச்சன்னு, ஒண்ணே விட்டுட்டு ஒண்ணே வச்சுக்கிட்டாவது வயிறு வளத் துரலாம். பணத்துக்குப் பெருத நாணயம் முன்னு ஆயிரும். இங்கேயோ ஒன்னேயும் என்னேயும் கட்டிப்போட்டு அடிச்சாலும் காக்காசுபோராது. அது நாலேதான் ரோக் கிதையும் கெட்டுப்போனியோன்னு திட்டிட்டேன் [கலங்கிய கண்ணேத் துடைத்துக் கொள்கிருள்]

முத்தன்:—அது கெடந்துட்டுப் போவுது. இப்ப ஒரு யோசனேசொல்லு. இதெ யென்னசெய்யலாம்?

செல்:—எனக்கு ஒண்ணும் புரியலியே!

முத்தன்:—வித்துப் புடுவமா?

செல்:—என்னபுச்சா ஔவா அறியரெ? வெள்ளே வேட்டி கட்டிக்கிட்டாக்கூட எவ்வி எவ்விப்பாயுது உலகம். இதைக்கொண்டுக் கிட்டுப்போய் விக்கப் போனு என்ன ஆகும்?

முத்தன்:—பின்னே ஒரு வெரல்லெதான் போட்டுவைப்பமா?

செல்.—சரியாப் போச்சு! பாம்பைக் கழுத்திலே மாட்டிக்கிட்டாப்பிலேதான். எந்த நேரத்திலே யாச்சும் பிடிங்கிரும்.

முத்தன்:—அது நாயந்தான். வீட்டுக் குள்ரைப் பொதச்சு வச்சுட்டா?

செல்: —பொதச்சாக்க என்ன? நெஞ்சுக் குள்ளரவந்து உக்காந்துக்கும். வெரைக் கோட்டலே எலிய வச்சுக் கட்டினுப்பல தான். வேலேக்குப் போனு வேலே ஓடாது. ராவுகள்ளெ தூக்கம் பிடிக்காது. வீட்டையே சுத்தச்சொல்லும். ஒரு அரசங்கண்ணேப் புடுங்கி வீட்டிலெ வச்சுப் புட்டம்னு சுயசுத்துக்குப் பாவமாவது போகும்.

முத்தன்:—என்னகுட்டி ஒண்ணுலேயும் ஓடவிட மாட்டம்கிறெ?

செல்:—அதுக்கு இதில்லெ மச்சான் வீடு. வைரத்தைத் தங்கத்திலெ பதிய வைக்கரதா? மண்ணுலெ பதியவைக்கரதா?

முத்தன்.—பின்னே என்னதான் பண்ணலாமுங்கிரே?

செல்:—என்னேக் கேட்டா ஒரே ஒரு ரோசனேதாங் தோணுது.

முத்தன்:—அதுதா என்ன?

செல்:—சொல்லுரேன். சொன்னுச் சொன்னபடி கேப்பியா?

முத்தன்:—அட முடிபுமான்னு பாப்பமே.

செல்:—அதுவா, கண்ண மூடிக்கிட்டு பளைய கொளத்திலேயே எரிஞ்சிடரது.

முத்தன்.—ஐயய்யோ!

செல்:—நாய்க்கி முளுத்தேங்கா தக்காது மச்சான்!

முத்தன்:—தெய்வம் பாத்து தந்தது குட்டி.

செல்:—அந்தத் தெய்வம் இதைத் தந்ததுக்கு பதுலா ஒரு 10 மீனே அதிகம் தந்திருந்தா நல்லா இருக்கும்.

முத்தன்:—ஓம் பேச்சைக் கேட்டா உருப்புட்டுப் போவலாம். வருசம் பூரா கெங்கைக் கரையையே நாங்காதுக் கெடந்தத்துக்கு கடவுள் இதைத் தந்திருக்காரு. வீசி எரிஞ்சிரவா? எரிவாகல்லே வெகு பேரு?

செல்:—சொன்னுக்கே கேக்கமாட்டியா? ஒனக்கு உலகம் தெரியாது. மச்சத்தைப் பிடிக்கர வலைதாங்தெரியும். இதெல்லாம் மனிசனைப் பிடிக்கர வலை. நேத்துவரை நாஞ்சொன்னதெல்லாம் தப்பாமக் கேட்டியே? இன்னக்கி வீம்பு வந்திருச்சே பாத்தியா? இந்தச் சனியனோடே வேலை. அதுவேண்டாம் வீசி எறி. அதுவும் ஒருத்தர் கண்ணுலையும் தட்டுப்படாமெப் போய் வீசி எறி.

முத்தன்:—போ குட்டி! பொம்பள புத்திங்காது சரியாருக்கு. ஒருகாலமும் மாட்டேன். எம்மோதாம் பாடுப்பட்டதுலெ கெடச்சுது.

செல்:--நெசந்தான். கெடக்க வேண்டியுதக் கிட்டெக் கெடச்சால்லெ? சேரவேண்டிய இடத்திலெ சேரல்லெ, மச்சான்! பாலுக்குச் சக்கரையும், பளங்கஞ்சிக்கி உப்பும் ஒரே மாருதியாத்தான் தோணும். ஆனு அதுக்குள்ளர ஏன்ன கெடக்குதுன்னு பாத்தால் மனிசனுக்கு மனுசன் வித்தியாசங்காது தெரியும். ஒனக்கும் மோதரதுக்கும் சரியில்லெ. வெரலுக்குத் தகுந்தாப்புலேதான் வீங்கணும். தங்க மோருதத்தை விக்கப்போயி இரும்பு வளயத்தை மாட்டிக்காதே.

முத்தன்:—நெறுத்துகுட்டி! நாஞ்செத்தாலும் இதைவிடப் போரதில்லை.

செல்:—தெரியும் விடமாட்டெ நீ நெனைச்சாலும் இது விட விடாது. தெரியாமலா சொன்னுக பணத்தாசெங்காது மோச்சத்துக்கு வாசக்கதவுப் பூட்டுன்னு. இன்னமும் ஒலகத்திலே பணங்காத்த பூதம்னு எத்தனையோ திரியுதெ.

முத்தன்:—நானும் வேணுலும் திருஞ்சிட்டுப் போரேன். இதை வித்துட்டுத்தான் மறுவேலை.

செல்:—சரி! என்னை மறக்கப் பண்ணிப்பிடுச்சு. ஆனுத் தெய்வத்தை மறந்துடாதே. சமயத்திலே அதுவாவது காப்பாத்தட்டும்.

(முத்தன் மோதிரத்துடன் வெளியே புறப்படுகிருன்).

(83-ம்பக்கத் தொடர்ச்சி)

இது?" என்று திடுக்கிட்டுக் கேட்டு ஜானகியைப் பார்த்தாள். ஜானகி 'ஐயோ!' என்று கூவி மயங்கி அருகிலிருந்த தாயாரின் பேரில் சாய்ந்துவிட்டாள்.

* * *

"அம்மா! ஜானகி!" என்று கெஞ்சின குரலில் நயந்து கூப்பிட்டார் ராமசேஷய்யர். ஜானகி ஒரு தடவை அசைந்து திரும்பிப் படுத்துக் கொண்டு "உம்!" என்றுள். "ஏனம்மா உளறினுய்? ஏதாவது சொப்பனம் கண்டாயா?" என்று பரிவுடன் கேட்டார் தகப்பனர். "இல்லையப்பா!" என்றுள் குழந்தை.

மறுநாள்காலையில் ஜானகிக்கு ஒன்றுமே ஓடவில்லை. முதல் நாள் இரவு கண்ட சொப்பனம் மனதில் உறுத்திக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் அகோரமய்யரும் அப்பாவும் உள்ளே பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டாள் ஜானகி. 'விரு விரு' வென்று அவள் உள்ளே போனுள். "எங்கே வந்தீர்கள் இங்கே?" என்று அகோரத்தைப் பார்த்துக் கேட்டாள். "என்ன? அதைப்பற்றி உனக்கென்ன? நாங்கள் ஏதோ பணவிஷயமாய்..." "உங்க பணமும் வாண்டாம், காசும் வாண்டாம்" என்றுள் ஜானகி. "அதிகப்பிரசங்கி! போ உள்ளே!" என்றுர் தகப்பனர் கோபமாக.

"ஏனம்மா! உனக்குக் கல்யாணம் பண்ண வேண்டாமா? உனக்குப் பைத்தியமா பிடித்துவிட்டது? எதுக்காக அகோரமய்யரிடம் சண்டைக்குப் போனுய்?" இப்படி தகப்பனர் கேட்டபோது இரவின் கனவு ஜானகிக்கு திரைப்படம் போல் எதிரே நின்றது. அப்போது விகாரமடைந்த ஜானகி முகத்தைப்பார்த்து நிலைக்குலைந்து நின்றுர் ராமசேஷய்யர்.




# மமதையின் அழிவு

(ஸ்ரீ கே. வேங்கடராமன், பி. ஏ.)

வெகு காலத்திற்கு முன்பு திருவள்ளுவர் என்னும் ஓர் புலவர் இருந்தார். அவர் மகா அறிஞர். வரப்பிரசாதி. பல நூல்களை இயற்றியிருக்கிறார். இவர் கொஞ்ச காலம் மயிலாப்பூரில் தன் மனைவியாருடன் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவியாரும், தன் கணவனைத் தெய்வம் போல் வழி பட்டு வந்தார்.

அக் காலத்தில் கொங்கணவர் என்னும் ஓர் முனிவர் இருந்தார். அவரும், திருவள்ளுவரைப் போல் ஓர் ஞானி. காவி வஸ்திரம் தவிர வேறொன்றும் உடுத்துவதில்லை. வீடு வீடாகச் சென்று, பிச்சையெடுத்து, அதைக் கொண்டு தன்னுடைய வாழ் நாட்களை நடத்தி வந்தார். அவருக்கு கொடிய தவம் செய்து அடையாத பொருளாகிய எம்பெருமானை நேரில் தரிசித்து, கிடைத்தற்கரிய மோக்ஷத்தை அடைய வேண்டும் என்ற ஆசை தோன்றிற்று.

ஓர் தனிமையான காட்டை அடைந்தார். அங்கு அருகிலிருந்த நீர் ஓடையில் ஸ்நானம் செய்து நேம நிஷ்டையுடன் தவம் செய்யத் தொடங்கினார்.

ஆனால் திருவள்ளுவரோ இல்லறத்தின் கண்ணே இருந்து, இயற்ற வேண்டிய கடன்களை இயற்றிக் கொண்டும், அப்பப்போது எம்பெருமான்பால் தன் கவனத்தைச் செலுத்திக் கொண்டும், இல்லற தருமத்தைச் செவ்வனே நடத்திக் கொண்டு வந்தார். திருவள்ளுவர் கடவுளைத் தெய்வமாகத் தொழ, அவர் மனைவியார் திருவள்ளுவரையே தெய்வமாக வழிபட்டு வந்தார்.

கொங்கணவர் தவம் செய்ய ஆரம்பித்து கொஞ்ச காலம் ஆயிற்று. அப்படி அவர் தவம் செய்து கொண்டு வரும் ஓர் நாள் அவ்வழியே பறந்து சென்ற ஓர் கொக்கானது இவர் மேனியின் பேரில் எச்சமிட்டது. அதனால் கொங்கணவர் தன்னுடைய தவத்தினின்றும் கலைக்கப்பட்டார். உடனே மகா உக்கிரகத்துடன், தன் பேரில் எச்சமிட்ட பக்ஷியை நோக்கினார். அவர் நோக்கின பார்வையில், அந்த கொக்கானது சாம்பலாய் எரிந்து கீழே விழுந்தது.

பார்த்தார் முனிவர். அவருக்கு ஒன்றுமே புரிய வில்லை. உடனே மமதை என்னும் அகங்காரம் அவரை வந்து சூழ்ந்து கொண்டது.

“ என்னுடைய தவம் சித்தி பெற்றது. இனி என்னை இவ்வுலகில் வெல்வார் எவரும் இல்லை” என்று அவர் கர்வம் கொண்டார். மேலே தவம் செய்ய அவர் மனம் ஓடவில்லை.

உடனே ஊர் திரும்பினார். மண்டையோட்டை எடுத்துக் கொண்டார். “பவதி பிக்ஷாந்தேகி” என்று வீடு வீடாக கிளம்பி விட்டார்.

ஒவ்வொரு வீடாகச் சென்று கடைசியில் திருவள்ளுவர் வீட்டிற்கு வந்தார். எப்பொழுதும் போல், “பவதி பிக்ஷாந்தேகி” என்று கூவினார்.

அச் சமயம், திருவள்ளுவரின் மனைவியார் தன் கணவருக்குச் செய்ய வேண்டிய காலைக் கடன்களை செய்து கொண்டிருந்தார். பாதியில் விட்டு வர அவருக்குப் பிரியமில்லை. ஆகையால், “ சிறிது பொறும்” என்று உள்ளிருந்தே பதிலளித்தனர்.

முனிவர் பார்த்தார். சிறிது நேரம் காத்தார். ஒருவரும் பிக்ஷை அளிப்பாரில்லை. அவருக்கு அதிகக்கோபம் வந்துவிட்டது

"என்னைப் போன்ற தவசிகளை காக்க வைப்பதா? ஆகட்டும்! வரட்டும், ஒரு கை பார்க்கிறேன்!". என்று சொல்லி, கண்களில் கோபத்தணல் வீச நின்று கொண்டிருந்தார்.

சிறிது நேரம் கழித்து திருவள்ளுவர் மனைவியார் பிக்ஷையுடன் வெளி வந்து அதை முனிவருக்கு இட்டார். இடும் பொழுது முனிவர் முகத்தைப் பார்த்தார். உடனே அம்மையாருக்குக் கோபம் வந்து விட்டது.

"கொக்கென்று நினைத்தனையோ, கொங்கணவா?" என்று கேட்டார். இதைக் கேட்டதும், கொங்கணவர் அப்படியே அசந்து நின்று விட்டார். "நான் காட்டில் கொக்கை எரித்த சமாசாரம் உமக்கு எப்படித் தெரியும்? மேலும் என்னுடைய பெயர் எப்படித் தெரியும்? இதை விளக்கமாகச் சொல்லும்" என்று அவ்வம்மையாரைக் கேட்டார். அதற்கு அவ்வம்மையார்

"காட்டில் சென்று அறை குறையாக தவம் செய்தால்தானா தவம்? அதை வீட்டில் செய்ய முடியாதா? நான் என்னுடைய கணவருக்கு மனப்பூர்வமாகச் செய்யும் தொண்டாகிய தவத்தின் பலனே யாகும் இது. நீர் உம்முடைய தவத்தினால் வீணாகக் கர்வம் கொண்டிருக்கிறீர். அதனால் கெடுதியே நேரும். ஆகையால் நீர் கொண்டிருக்கும் மமதையை அழித்து உண்மைப் பயனை அடைய முயற்சி செய்யும்" என்று சொல்லி உட் சென்றனர்.

முனிவரும் தன்னுடைய மமதை நீங்கி, பின்பு மோக்ஷம் அடைந்தனர்.

---

KHANDUR காந்தூர் — REGISTERED KHANDUR O.K LEHYAM TRADE MARK — LEHYAM லேகியம்

**ஆரோக்கியமே நல்ல தனம்**

இந்த அருமையான லேகியம் நன்கு பரிசோதிக்கப்பட்டு சுமார் 95 வருஷ காலமாக கீழ்க்கண்ட வியாதிகளாகிய பித்த வெட்டை, சோகை, மஞ்சட்காமாலை, பாண்டு, வீக்கம், இரத்தக்குறைவு, கைகால் அசதி, உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சல், பசியின்மை, தாது பலக்குறைவு, இளமையில் முதுமைபோல் தோன்றும் அகால மூப்பு, பிரசவத்துக்குப்பின் ஏற்படும் பலக்குறைவு, கண் ஒளி மங்கல், கண்மாசி பூத்தல் முதலிய வியாதிகளைப் போக்க பிரசித்திபெற்றது.

நற்பலன்பெற 48 தோலா எடையுள்ள காந்தூர் லேகியத்தை 40 நாள் சாப்பிடல்வேண்டும். "பலன் பெறுவிடில் பணம் வாபஸ்" செய்ய உத்தரவாதம் பெற்ற இந்த ஒரே லேகியத்தை ஓர் முறை பரீட்சித்து உண்மையுணர்ந்து உங்களன்பர்கட்கு உபதேசிக்கக் கோருகிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 12 தோலா | (10 நாள்) | லேகியம் | ... | ரூ. 1 0 0 |
| 24 ,, | (20 ,, ) | ,, | ... | ரூ. 2 0 0 |

காந்தூர் லேகியம் டிப்போ, பம்பாய் — சென்னை — கல்கத்தா.

*Sole Agents:*—(For INDIA, BURMA, CEYLON & F. M. S.)

நயினர்சன் அண்டு கம்பெனி,

198, அங்கப்ப நாயக்கன் தெரு, ஜி. டி., சென்னை.

ஸ்டாக்கிஸ்ட்கள் தேவை

பொருளாதார அனுபந்தம்

# இந்தோ-பிரிட்டிஷ் ஒப்பந்தம்

சென்ற மார்ச் மாதம் 20-ந் தேதி செய்யப்பட்ட இந்தோ - பிரிட்டிஷ் ஒப்பந்தம் வியாபார சமூகத்தாலும் தலைவர்களாலும் கண்டிக்கப்பட்டுவிட்டது. இந்த சமயத்தில் அந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தெளிவாகத்தெரிந்து கொள்வது உபயோகமாக இருக்கும்.

### அடிமடியில் கை

முதலாவதாக, இங்கிலாந்திலிருந்து இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் துணிமணிகளுக்கு சலுகை காட்டப்பட்டிருக்கிறது. அதற்குத் தகுந்தாற்போல இங்கிலாந்து இந்தியப் பருத்தியை வாங்கிக் கொள்ள வேண்டும்.

1933—34 வருஷத்தில் இந்தியா 3,42,000 மூட்டை பருத்தியை இங்கிலாந்துக்கு ஏற்று மதிசெய்தது. ஆனால் 1936—37 வருஷத்தில் 6,10,000 மூட்டைகளாக உயர்ந்தது. ஆகவே இந்தியாவின் ஏற்றுமதி ஆச்சர்யப்படத் தக்க விதம் அதிகரித்திருக்கிற தென்பதில் சந்தேகமில்லை.

ஆனால் இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் துணிமணிகள் தொகை குறைந்து வந்திருக்கின்றன. இந்திய மில்கள் ஏராளமாக உற்பத்தி செய்வதாலும், ஜப்பான் போட்டியாலும் இங்கிலாந்து துணிமணிகளுக்கு கிராக்கி இல்லாமல் போயிற்று. 1936-ம் வருஷத்தில் இந்திய சர்க்கார் இங்கிலாந்துத் துணிகள்பேரில் விதிக்கப்பட்ட 25% தடை வரியை 20% ஆக குறைத்தும் விரும்பிய பலன் ஏற்படவில்லை. அதே வருஷத்தில் ஜப்பானிய இறக்குமதியும் க்ஷீணிக்கவே இந்திய மில்கள் தேசத்திற்குத் தேவையான துணியை சப்ளை செய்யத் துவங்கின. இந்த நிலையில்தான் இந்தோ பிரிட்டிஷ் ஒப்பந்தம் உண்டாகியிருக்கிறது.

இந்த ஒப்பந்தப்படி முன்னே இருந்த 20% தடை வரியை 17½% ஆகக்குறைத்துவிட்டார்கள், ஆனால் இங்கிலாந்திலிருந்து ஒரு வருஷத்தில 500,000,000 கஜத்துக்குமேல் துணிகள் இறக்குமதியானல் அடுத்த வருஷத்தில் அதிகப்படி வரி போட்டு இறக்குமதியை முந்தின வருஷத்திலெவ்வளவு கஜம் இறக்குமதியாயிற்றோ அந்த அளவுக்கு மேல் போகாமல் தடை செய்யலாம். ஆனால் எந்த ஒரு வருஷத்தில் இறக்குமதி 4,25,000,000 கஜத்திற்குக் குறைவாயிற்றோ அந்த வருஷக் கடைசியில் முன்பு அதிகமாக (17½%-க்கு அதிகமாக) போடப்பட்ட வரியை ரத்து செய்ய வேண்டும்.

### இந்தியப் பருத்தி

இந்தியப் பருத்தி 4,00,000 மூட்டைக்குக் குறைந்து 1939ம் வருஷத்திலும் 1940-ம் வருஷத்திலும், அதற்குப் பிறகு 450,000 மூட்டைக்குக் குறைந்தும், இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்பட்டால் மூலாதார வரி உயர்த்தப்பட்டு அதிகத் தீர்வை விதிக்கப்படும்.

இந்தியப் பருத்தி அதிகமாக இங்கிலாந்தில் உபயோகமானல் அதற்குச் சலுகை உண்டு. உதாரணமாக, இங்கிலாந்து ஒரு வருஷத்தில் இந்தியாவிடமிருந்து 7,50,000 பருத்தி மூட்டைகளுக்குமேல் வாங்கிக் கொண்டால், இந்தியாவில் அது இறக்குமதி செய்யும் துணிமணிகளில் போடப்படும் 17½% தடை வரியை 15% ஆகக் குறைக்கவேண்டும்.

இந்த ஷரத்துக்களிலிருந்து இந்தியப் பருத்தி ஏற்றுமதிக்கும் இங்கிலாந்து துணி இறக்குமதிக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டாகிறது. இறக்குமதி இவ்வளவுதான் இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்காவிட்டாலும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியப் பருத்திக்கு இங்கிலாந்தில் கிராக்கி ஏற்பட இதனல் வழி ஏற்பட்டிருக்கிறது.

இங்கிலாந்துக்கு இந்த ஷரத்தால் உண்டாகும் லாபம் எப்படிப்பட்டதென்பதை

அடுத்த வருஷ முடிவில்தான் கூறவேண்டும். இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணியின்மேல் போடப்பட்டவரி குறைக்கப்பட்டிருப்பது இங்கிலாந்துக்கு மிகுந்த உதவிசெய்யக் கூடியது.

## இங்கிலாந்தின் தயாளம்

இரண்டாவதாக, இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகும் பொருள்களில் 82%க்குச் சலுகை காட்டப்பட்டிருக்கிறது.

விளக்கெண்ணெ, கயிறு, தோல், புண்ணக்கு முதலியவைகளுக்குப் போடப்படும் தடை வரியில் 10% சலுகை கொடுக்கப் பட்டிருக்கிறது. பாய், சாக்கு, பை, துணி முதலியவைகளுக்கு 20% சலுகை உண்டு. அரிசி, டீ, முதலிய பொருள்களுக்கு கனத்தை ஒட்டி விசேஷ சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இந்தியா கொடுக்கும் சலுகைகளை இப்போது கவனிப்போம்.

சிமெண்ட், ரசாயனப் பொருள்கள், மருந்து, கம்பளி சாமான் முதலியவற்றிற்கு 10% சலுகை காண்பிக்கிறது. மோட்டார்கார்களும், மோட்டார் சைகிள்களும் 7½% சலுகைபெறுகின்றன.

தேயிலை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சரக்குகளுள் முக்கியமானது. 1937-38 வருஷங்களில் 21·32 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள இந்தியத் தேயிலை இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. ஒரு பவுனுக்கு 2 பென்ஸ் விகிதம் இந்தியத் தேயிலைக்குச் சலுகை காட்டப்பட்டிருக்கிறது. இந்தியத் தேயிலை ஏற்றுமதியில் 85% இங்கிலாந்துக்குப் போகிறது.

1937-38 வருஷங்களில் 107 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள இந்தியப் புகையிலை இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்பட்டது. இங்கிலாந்துதான் இந்தியப் புகையிலை வாங்கும் சிறந்த 'மார்க்கட்'. இந்தியப் புகையிலைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகை முக்கியமானது.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மணிலாக்கொட்டைக்கும் சலுகை உண்டு. குடியேற்ற நாடுகள் எதுவும் இந்தியாவைவிட விசேஷப் பாதுகாப்பு பெற முடியாது.

பதனிடாத தோல் தடைவரி இல்லாமலே இங்கிலாந்திற்குள் செல்லலாம். ஆட்டுத்தோல் ஒரு 'காரண்டியான' சலுகையைப் பெறுகிறது.

## சில்லரை விஷயங்கள்

மூன்றுவதாக இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் சாமான்களில் 106 சாமான்களுக்கு இதுவரை சலுகை காட்டப்பட்டு வந்தது.

இப்போது 20 சாமான்கள் தான் சலுகையைப்பெறும். 18,75 லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள சரக்குகள் சலுகை பெற்றன. இனிமேல் 7,68 லக்ஷ ரூபாய் பெறுமானமுள்ள சரக்குக்குத் தான் சலுகை உண்டு. இந்த சலுகை விசேஷமாக உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளுக்குத்தான் காண்பிக்கப்படும். இந்திய சாமான்களோடு போட்டி இல்லாத சரக்குகளுக்குத்தான் இந்த சலுகை. ஆனால் இந்திய ஜனங்களுக்கு உபயோகமான சாமான்கள் சலுகை ஜாப்தாவிலிருந்து நீக்கப்பட்டன. உதாரணமாக, ரசாயன சாமான்கள், மின்சார சாமான்கள், பாட்டரிகள், வைத்தியப் பொருள்கள் முதலியவைகளுக்கு சலுகை ஜாப்தாவில் இடமில்லை.

கடைசியாக, ஸிலோனுடன் வேறு ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ள வேண்டும். இந்தியாவோடு பிரிட்டன் செய்து கொண்ட ஒப்பந்தம் இனிமேல் ஸிலோனை பாதிக்காது. அதுமாதிரியே ஸிலோனுடன் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தம் இந்தியாவைப் பாதிக்காது.



## ஸ்நானத்திற்கு
## ஜல்கோ
## பாபுலர் ஸோப்

ஸ்நானம் செய்து பல மணி நேரத்திற்குப் பின்னும் அந்த குளு குளு வென்ற உணர்ச்சி இருந்துக் கொண்டே இருக்கிறது. முகத்தையும், உடம்பையும் பட்டுப் போன்று மழ மழப் புடனும், வசீகரத்துடனும் வைத்திருப்பதில் ஜல்கோ பாபுலர் ஸோப் ஒப்புயர்வற்றது. 4-அவுன்ஸ் கட்டி அணா 0-2-6. 3 கட்டியுள்ள பெட்டி அணா 0-7-3.




அஜீரணத்திற்கு டைஜெஸ்டோ

❀

அழகிய கேசத்திற்கு ஜல்கோ ஹேர் ஆயில்

❀

எங்கும் கிடைக்கும்

# ஜெய பாரதம் கம்பெனி,

தபால் பெட்டி 83, :: மதருஸ்.

# *உலக வியாபார நிலைமை

நாம் இப்பொழுது வியாபார பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு வருகிறோம். 1929-ம் வருஷத்தில் வியாபார உலகில் ஏற்பட்ட ஒரு பஞ்சத்தைக் காட்டிலும் இது அதிக கடுமையானது என்றே சொல்லலாம். இதற்குக்காரணம் சர்வதேச நிலைமையே; ஒரு நிச்சயமில்லாத அமெரிக்காவின் பொருளாதாரத் திட்டமும் இங்கிலாந்தில் ஆயுத விஸ்தரிப்புக்காகச் செலவு செய்ய வேண்டி தொடங்கிய புரட்சியும்தான். இதனால் வருகிற வருஷத்தில் வியாபார நிலைமை எப்படி இருக்கும் என்று நம்பிக்கையுடன் சொல்வதற்கில்லாமல் இருக்கிறது.

இந்தியா, யுனைடெட் ஸ்டேட்ஸ், இங்கிலாந்து, இந்த மூன்று தேசங்களிலும் கடந்த வருஷம் முதற்பாதியில் வியாபாரம் க்ஷீணித்துக்கொண்டே வந்தது. இந்த க்ஷீணம் சைனா-ஜப்பான் விரோதத்தால் அதி தீவிரமாக இருந்தது. இந்திய சரக்குகளை ஓயாமல் வாங்கும் தேசம், இந்த சைனா—ஜப்பானிய விரோதத்தால் தன் வாங்கும் சக்தியை இழந்தது. ரூபாயின் மாற்று விகிதத்தின் பாதிப்பாலும், இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரக் குறைவாலும், சென்ற வருஷத்தின் முதல் ஆறு மாதங்களில் இந்தியாவின் வியாபார நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. ஜூன் மாதத்தில் சரக்குகளின் மொத்த விலை குறைந்துகொண்டே வந்தது. ஆனால் தொழில் அதிகமாக பாதிக்கப்படவில்லை. வஸ்திர நெசவுச்சாலை, இரும்புத் தொழிற் சாலை, முதலியவைகளின் ஸ்திதி அவ்வளவு மோசமாக இல்லை. இந்தியத் தொழில், தன் பிற் போக்கை கூடியவரையில் தடுத்தது. ஆனால் விவசாயத்தொழில் இப்படித் தடுக்க முடியாமல், வருந்தியது. வியாபார இலாகாவில் ஏதோ சில அம்சங்களில், ஜூன் கடைசியில், சிறிதளவு முன்னேற்றம் தென்பட்டாலும் அடுத்த வருஷத்தின் வியாபார நிலைமை ஊகிக்க முடியாமலிருக்கிறது.

இப்படி நம் வியாபாரம் நசிப்பது நம்முடைய அஜாக்கிரதையால்தான். யுனைடெட் ஸ்டேட்ஸ், இங்கிலாந்து முதலிய தேசங்களில் வியாபாரத்தின் பிற்போக்கைத் தடுக்க செய்யும் பிரயத்தினங்களில் ஒரு சில சதவிகிதம்கூட நம் தேசத்துச் சர்க்கார் எடுத்துக்கொள்ளவில்லை. வெளிநாட்டு வியாபாரங்களில் பல ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டுக்கொண்டிருந்தபோது 1929-1939 வருஷ காலத்தில் இந்தியாவின் விவசாயத் தொழில் நிலைமை மாறுதலடையவே இல்லை. அதன் உயிர் கோழிப் பிராணனாக இருந்தது. இந்நிலைமையை சமாளிக்க சர்க்கார் ஒன்றுமே செய்யவில்லை. விவசாயிகள், தங்கள் முன்னேற்றத்திற்காக சர்க்கார், சரக்குகளின் உள்நாட்டு விலையை அதிகரித்து, அவர்கள் விகித திட்டத்தை மாற்றவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். வெளி நாடுகளில் இந்திய சாமான்கள் விற்பனையாக பல வியாபார ஒப்பந்தங்களால் சர்க்கார் மார்க்கெட்டுகளை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இந்த கூக்குரல்கள் சர்க்கார் காதில் செவிடன் காதில் சங்கு சப்தம்போல் இருந்தன.

இப்படி துர்ப்பலமாக விருக்கும் விவசாயிகளுக்கு எப்படி சக்தியளிப்பது? இரண்டு வழிகள் இருக்கின்றன. அன்னிய தேசங்களுடன் நமது சர்க்கார், நமக்கு பலனளிக்கும் பல வியாபார ஒப்பந்தங்களைச் செய்துக்கொள்ள வேண்டும். வெகு வேகமாக நம் தேசத்துத் தொழில்களை அபிவிருத்தி செய்து நம் நாட்டை ஓர் தொழில்நாடாக ஆக்கவேண்டும். அப்பொழுது நமது சரக்குகள் நம்முடைய தேசத்திலேயே சுகமாக விற்பனையாகிவிடும். ஏற்றுமதிக்கு மிகுந்த சரக்குகளுக்கு, நிச்சயமான ஒரு உள்நாட்டு மார்க்கெட் நிச்சயமில்லாத வெளிநாட்டு மார்க்கெட்டைக் காட்டிலும் சிறந்ததல்லவா?

*ஸ்ரீ ஜம்ஷத் மேதாவின் பிரசங்கத்தின் சாராம்சம்.

# இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள்

(ஒரு நிருபர்)

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் சமீப காலத்தில் அடைந்த வெற்றி தேசத்தின் பொருளாதார வெற்றியென்று முன்பு எழுதியிருந்தேன். ஏனெனில் முதலைத் தேக்கிவைத்து தேச வளர்ச்சிக்காகச் செலவிடும் ஸ்தாபனங்களில் இன்ஷ்யூரன்ஸ் பிரதானமானது. இன்ஷ்யூரன்ஸ் ஒரு லாட்டரி அல்ல; முதலைப் பெருக்கி மனிதன் தாழ்ந்த சமயத்தில் கைகொடுக்க ஏற்பாடு செய்யும் ஒரு ஸ்தாபனம். சந்தடியன்னியில் ஸோஷலிஸத்தின் தத்துவத்தைக் கையாளும் ஓர் முயற்சி. ஆனால் ஸோஷலிஸத்தின் பேரால் தன் முயற்சி நாசமாய்ப் போய்விடாதபடி தடுக்கும் ஓர் கருவி. இந்த முயற்சிகள் பலிதமாக வேண்டுமானால் ஜனங்கள் இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனங்களை ஆதரிக்க முன்வரவேண்டும். வீண[illegible]கல் இரும்புப் பெட்டியில் தூங்கா[illegible]ங்குகளிலும் இன்ஷ்யூரன்ஸிலு[illegible]ட்டுவைப்பதால் ஒருவர் தன் கடமையை செய்துகொள்வதல்லாமல் சமூகக் கடமையையும் செய்தவராகிறார். எல்லோரும் இன்ஷ்யூர் செய்துகொள்ளத் தொடங்கினால்தான் இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனங்களின் முதல் வளர்ந்து அதனால் அக்கம்பெனிகள் சிறந்த வழிகளில் முதலை உபயோகிக்கமுடியும்; தொழில் வளர்ச்சிக்கு உதவியளிக்க முடியும்.

இந்தியக் கம்பெனிகள் தற்போது ரூ. 31½ கோடிக்குமேல் 'பண்டுகளைப்' பெற்றிருக்கின்றன. பாலிஸி ஹோல்டர்களுக்குப் பாதகமாகாத வழிகளில் முதலை தொழில் வளர்ச்சிக்குச் செலவிடலாம். சமீபத்தில் ஸர் பி. ஸி. ரே எழுதிய ஓர் கட்டுரையில் "இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் தொழில்களுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டும், யோக்கியமான நபர்கள் தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கு உதவியளித்து தொழில் வளர்ச்சியைப் பெருக்கவேண்டும்" என்று வற்புறுத்தி யிருந்தார். உண்மையில், இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனங்களைத் தொழில் வளர்ச்சியின் முக்கிய நாடியென்று கூறுவது பொருந்தும். இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளில் இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனங்கள் தொழிற்சாலைகளுக்கு அளித்திருக்கும் உதவி குறிப்பிடத்தக்கது. தொழிலில் சம்பந்தப்பட்டிருப்பவர்களது தன்மையையும் கௌரவத்தையும் அறிந்து பண உதவி செய்யவேண்டியது எவ்வளவு சிரமமான காரியம் என்று சொல்லத் தேவையில்லை.

இந்தியக் கம்பெனிகள் செலவு ஜாப்தாவை நாம் பார்க்கும்போது சென்ற வருஷத்தைக்காட்டிலும் குறைவு தென்படுகிறது. அது சிறிதுதான் ஆனாலும், சந்தோஷமான விஷயம். கம்பெனியின் செலவைக் குறைத்து வரும்படி உள்ள வழிகளில் முதலைப் போடுமானால் நிர்வாகம் பெரிய சேவை செய்ததாக ஆகும்.

இரண்டாவதாக, ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் தவிர மற்ற இனங்களிலும் கம்பெனிகள் பணத்தைத் தேடிக்கொள்ளவேண்டியது அவசியமாகும். சுமார் 213 இந்தியக் கம்பெனிகள் ஆயுள் இன்ஷ்யூரன்ஸில் ஈடுபட்டிருக்கின்றன. ஆனால் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனங்கள் வெகு குறைவு. உதாரணமாக, மொத்தத்தில் 2·75 கோடி ரூபாய்க்கு இந்தியாவில் ஆயுள் அல்லாத மற்ற இனங்களில் இன்ஷ்யூரன்ஸ் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் இந்தியக் கம்பெனிகள் பங்கோ 74 லக்ஷ ரூபாய்தான். இந்தியக் கம்பெனிகள் பொது இன்ஷ்யூரன்ஸில் முழுகவனத்தையும் செலுத்தி கம்பெனியின் 'பண்டைப்' பலப்படுத்திக் கொள்ளவேண்டும்.

நன்றாக நிர்வகிக்கப்பட்ட சிறந்த இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனங்கள் பாலிஸிதாரர்களுக்கு உதவி செய்வதல்லாமல், தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு அளிப்பதல்லாமல் ஒரு தேசத்தின் பொருளாதாரத்தையே மாற்றக் கூடுமாதலால் 'இன்ஷ்யூரன்ஸ்' தேசத்தின் ஜீவநாடிபோன்றது.

# பொருளாதார உலகம்

ராஜீய வரையறுப்புகளைப் பொருளாதார விஷயங்களில் கொண்டுவரக் கூடாதாகையால், தொழிலாளர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை ஓர் உருவாக்க ஒரு ஸ்தாபனம் இருக்கவேண்டியது இன்றியமையாதது.

—ஸ்ரீ கஸ்தூர் பாய் லால்பாய்.

* * *

வெளி தேசங்களில் வசிக்கும் என்னைப் போன்ற துரதிருஷ்டக்காரர்கள் மாகாண சர்க்கார்களிடமிருந்துதான் உதவியை எதிர்பார்க்கலாம். ஏனெனில் மத்திய சர்க்கார் ஐரோப்பியர்களின் தர்மகர்த்தாக்கள்.

—ஸ்ரீ ஹுஸேன்பாய் லால்ஜி.

* * *

இப்போது இந்திய சர்க்கார் கையாளும் "வித்தியாச" சலுகை முறையைக் கைவிட்டால்தான் படித்தோர் வேலையில்லாத் திண்டாட்டம் தீரும்; இந்திய விவசாயச் சரக்குகளுக்கு இந்தியாவில் நல்ல "மார்க்கெட்" கிடைக்கும்.

—ஸ்ரீ லாலா ஸ்ரீராம்.

* * *

பர்மாவில் 10 லக்ஷம் இந்தியர்கள் இருக்கிறார்கள், 80 கோடி ரூபாய் முதல் போட்டிருக்கிறார்கள். இந்தியர்களுக்கு உபத்திரவம் கொடுக்கக்கூடிய சட்டங்கள் இயற்றப்படுகின்றன. இந்திய சர்க்கார் தூக்கத்திலிருந்து எழுந்து பர்மாவில் இந்தியர்கள் உயிரையும் கலையும் கவனிக்கத்தக்க ஓர் கட்டுக்கோப்பான ஒரு இலாகாவை ஏற்படுத்தவேண்டும்.

—ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி.

* * *

தங்கள் மூலபலத்தாலும், அனுபவத்தாலும் அயல் நாட்டுக் கம்பெனிகள் மலிவான-ஆனால் நல்ல வசீகரமான-முறையில், சாமான்களை வெகு தூரத்திலுள்ள இடங்களில்கூட விற்று விடுகின்றன. அப்படிப்பட்ட போட்டிகள் இக்காலத்தில் ஏற்படக்கூடியவைதான். அவை, யோக்யமான, கௌரவமான முறைகளைக் கையாளும் வரையில் நீங்கள் குற்றம் சொல்ல முடியாது. ஆனால் உங்களை இன்னும் நன்றாக உழைக்கத் தூண்டுகிற முறையில் அவைகளை வரவேற்கவேண்டும். உங்கள் தொழில் அறிவையும், விற்பனை முறையையும் அதிகரித்துக்கொள்ள முயலும்போது, இந்த தேசத்தின் தொழில் விருத்தியையும், பொருளாதார சுயமரியாதையையும் நிலை நாட்டுவீர்கள்.

—ஸ்ரீ என். மாதவராவ்.

* * *

இந்தியத் தொழிலோ, சோப் தொழிலோ, வெளி நாட்டிலிருந்து ஒவ்வொரு நாளும் உபயோகத்துக்காக, பெரிய இயந்திரங்களோ சிறிய பாகங்களோ தருவிக்கும் வரையில் இந்தியத் தொழில் ஆரோக்கியமான வாழ்வு வாழமுடியாது; வேகமான வளர்ச்சியடைய முடியாது.

—ஸ்ரீ ஏ. வி. ராமநாதன்.

* * *

வர்த்தக ஒப்பந்தங்[illegible] கப்பல் தொழில், இன்ஷ்யூ[illegible] பாங்கித் தொழில் முதலியவை சம்பந்தமான ஷரத்துக்கள் இருப்பது வழக்கம். இந்த இண்டோ—பிரிட்டிஷ் ஒப்பந்தத்தில் இந்திய சர்க்காரும் பிரிட்டிஷ் சர்க்காரும் அவ்விஷயங்களைப் பற்றி கவலைப்படவே இல்லை ஆகவே இந்த ஒப்பந்தத்திற்கு அங்கீகாரமளிக்க சிறிதும் நியாயமில்லை.

—ஸ்ரீ புலாபாய் தேசாய்.

* * *

பருத்தி மில் தொழில் இவ்வளவு தியாகம் செய்ய வேண்டியிருப்பதாலும் பதிலுக்கு எவ்வித அனுகூலமும் பெறாததாலும் இத்தொழிலுக்கோ அல்லது விவசாயிகளுக்கோ, மற்றவர்களுக்கோ நன்மை ஏற்படாதாகையாலும் நான் இந்த இந்தோ-பிரிட்டிஷ் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

—ஸர் ஹோமி மோடி.

* * *

கட்டுபாடான மாற்று விகிதத் தடைகளை ஏற்படுத்தினால் தான் வியாபாரச் சூதை (speculation) தீர்மானமாக நிறுத்த முடியும்.

—பால் என்ஸிம்.